Regd No M. 4900. 16 பக்கங்கள்.

# குடி அரசு

ESTD 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 30-10-1948 சனிக்கிழமை } மலர் 8.

## என் ஆசை!

★

"இன்னும் பத்தே ஆண்டுகளுக்குள் திராவிடத்தனி ஆட்சி ஏற்பட்டு விடும். இப்போது திறந்து வைக்கும் திராவிட நாட்டுப் படத்தை அப்போது திறந்து வைக்கும் வாய்ப்பை பெரியாரவர்களும் நீங்களும் எனக்கு அளிக்க வேண்டும். அதுதான் என் ஆசை".

24ம் நாள் ஈரோட்டு மாநாட்டில் "திராவிடநாடு" படத்தைத் திறந்து வைத்தபோது,
தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

சிறுவர் பகுதி.

# நீஞ்சத் தெரியுமா?

"தாதா"

மட்டப்பாறை என்ற கிராமத்திலே ரெட்டைப் பிள்ளையார் கோவில் என்று ஒரு கோவிலிருந்தது. அந்தக்கோவில் பூசாரியின் பெயர் கட்டப்பாரையன்.

ஒரு நாள், வட்டப்பாறைக் கிராமம் மொட்டைப் பிள்ளையார் கோவில் பூசாரி கொட்டாப்புளி அய்யன், மட்டப்பாறை ரெட்டைப் பிள்ளையார் கோவில் பூசாரியாகிய கட்டப்பாரைய்யனைக் காண வந்தான்.

ரெட்டைப் பிள்ளையார் கோவில் வரும்படி மிகவும் மட்டமாக இருப்பதைக்கண்டு வருத்தப்பட்டுக் கண்ணீரைக் கொட்டினான். அதைப்பார்த்துக் கொண்டிருந்த கட்டப்பாரைய்யன் அந்தக் கொட்டாப்புளி அய்யனுக்குமொட்டைப் பிள்ளையாரைக் காட்டிலும் ரெட்டைப் பிள்ளையார் மீதுதான் அதிகப் பக்தி போலிருக்கிறது என்று எண்ணிப்பெருமைப்பட்டுக் கொண்டிருந்தான்.

அதை அறிந்ததும் கொட்டாப்புளி அய்யனுக்குக் கோவம் வந்துவிட்டது. 'ஓய் கட்டப்பாரைய்யரே! உம்ம மண்டை மூளை வறண்டு போயிடுத்தோ என்ன? என் மொட்டைப் பிள்ளையார் வரும்படியைவிட உம்மரெட்டைப் பிள்ளையார் வரும்படி ரொம்ப மட்டமாயிடுத்தேனு, நான் கண்ணீரைக் கொட்டிக் கொண்டிருக்கச்சே! நீர் வெறுமனே பெருமைப் பட்டுண்டிருக்கலாமோ?' என்று கேட்டான்.

அதற்கு, 'நீர் கண்ணீரைக் கொட்டித்தானென்ன? கொட்டாமல்தானென்னவோய்? இங்கேல்லாம் கருப்புச்சட்டைக்காரனுங்க பிரச்சாரம்னா வனுத்துண்டே போறது' என்று கட்டப்பாரைய்யன் கூறினான்.

'உம்மைப்போன்ற அசட்டுப் பிராமணனுங்க உயிரோடு இருக்கச்சே, நம்ம முன்னோர் வியாபாரமாகிய கோயில் குளங்கள் நிலைக்கவா போகின்றன? ஊஹூம்......! நான் நம்பலை' என்று மிக்க வெறுப்போடு கூறினான் கொட்டாப்புளி அய்யன்.

'அப்படியானால், உம்மைப் போன்ற கெட்டிக்காரப் பிராமணனாலேயாவது இந்த ரெட்டைப் பிள்ளையார் கோவில் வரும்படி அபிவிருத்தி அடைந்தது என்று சொல்வதற்கு ஏதாவது செய்துவிட்டுப்போமே!' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான் கட்டப்பாரய்யன்.

அப்படித்தான் செய்யப்போவதாகச் சொல்லிவிட்டுத் திரும்பிவந்த கொட்டாப்புள்ளி அய்யன், ஒரு ஆற்றைக்கடந்து செல்லும்போது, ஓடக்காரனிடம் முதல் முதலாகத் தன் வேலையை ஆரம்பிக்க எண்ணி ஓடக்காரனை நோக்கி, 'ஏன்பா! உன் பெயரென்ன?' என்று கேட்டான்.

'என் பெயர் நல்ல முத்து' என்று பதில் சொன்னான் ஓடக்காரன். அடுத்தபடியாகச் 'சாதி என்ன?' என்று கேட்டான் கொட்டாப்புள்ளி.

'ஆண் சாதி' என்று சொன்னான் நல்லமுத்து. ஆச்சரியப்பட்டான் கொட்டாப்புளி. பிறகு, சற்று மௌனமாக இருந்துவிட்டுக் கொட்டாப்புளி மீண்டும் தன் குறும்புத் தனமான கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தான்.

'உனக்கு வேத சாஸ்திரங்கள் தெரியுமா?' என்று கேட்டான் கொட்டாப்புளி. 'தெரியாது' என்றான் நல்லமுத்து.

'அப்படியானால், உன் வாழ்நாளில் கால் பாகம் வீணாகப் போய்விட்டதே! சரி. போனது போகட்டும்! மட்டப்பாறையிலுள்ள ரெட்டைப் பிள்ளையார் கோவிலுக்குப் போய் எப்பவாகிலும் பூசை செய்திருக்கியோ?' என்று கேட்டான் கொட்டாப்புளி அய்யன்.

'அங்கே கட்டப்பாரய்யன் என்ற ஒரு முட்டாப் பயல், "புதையலைப் பூதம் காத்தது!" என்பார்களே! அதைப்போல் ரெட்டைப் பிள்ளையார் கிட்டவே நிற்கிறான். என்னைப்போல் உள்ளவங்களைக் கண்டால், அந்தப் பிள்ளையார் கிட்டவே நெருங்க விடமாட்டேனென்கிறான். ஆனால், தட்டை நீட்டித் தட்சணைமட்டும் தவறாமல் கேட்பான்! அதனால் தான் அந்தப் பக்கமே நான் எட்டிக்கூடப் பார்ப்பதில்லை' என்றான் நல்ல முத்து.

'அடடா! அப்படின்னா உன் வாழ்நாளில் அரைப் பாகம் அல்லவா வீணாகப் போய்விட்டது!! சரிசரி. போனதெல்லாம் போகட்டும். அந்தரெட்டைப் பிள்ளையார் மீது உனக்குப் பக்தியாவது உண்டோ இல்லையோ?' என்று கேட்டான் கொட்டாப்புளி அய்யன்.

'எப்படி இருக்கமுடியும்' என்னைத் தன் கிட்டவே நெருங்க விடாமல், தனக்கு ஒரு தரகனை நியமித்துக்கொண்டிருக்கும் எந்தச் சாமி இடமாவது எனக்குச் சொந்தமோ, பக்தியோட ஏற்படமுடியுமா?' என்று கேட்டான் நல்ல முத்து.

கொட்டாப்புளி அய்யனுக்குக் கடுங்கோவம் வந்து விட்டது. 'நீ ஒரு நாஸ்திகன்! உன் வாழ்நாளில் முக்கால் பாகமும் வீணாகப்போய் விட்டது!! இனிமேலாவது, நீ ஒரு பக்தனாக மாறாவிட்டால் நரகத்திற்குத்தான் போய்ச் சேருவாய்!!!' என்று திட்டினான்.

அந்தச் சமயம் ஓடம் ஆற்றின் நீர்ச்சுழியில் சிக்கிக் கொண்டு சுழல ஆரம்பிக்கவே, நல்லமுத்து கொட்டாப்புளி அய்யனை நோக்கி 'ஓய் அய்யரே! உமக்கு "நீஞ்சத் தெரியுமா?" என்று கேட்டான்.

'அய்யய்யோ......! எனக்கு நீஞ்சத் தெரியாதே......!!' என்று அழுதான் கொட்டாப்புளிஅய்யன்.

'அப்படியானால், இப்போ உம்முடைய வாழ்நாள் முழுப்பாகமுமே வீணாகப்போய்விட்டதே!' என்று கூறிவிட்டு ஆற்றில் குதித்து நீந்திக் கரையேறிய நல்லமுத்து 'ஏட்டுச் சுரைக்காயெல்லாம் கறிக்கு உதவுமா!' என்று முணங்கிக்கொண்டேவீட்டுக்குப் போய்ச்சேர்ந்தான்.

★

## ஈரோடு மாநாட்டில் வாழ்க்கை ஒப்பந்தம்.

அக், 24ல் ஜெயங்கொண்டான் தோழியர் பா. சரோஜினியும் உடையார்பாளையம் தோழர் மு. சுந்தரராஜனும் தங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தை திராவிடப்பெருங்குடி மக்கள் முன்னிலையில் நிறைவேற்றியதன் நினைவாக நன்கொடை ரூ. 1ம் வரப்பெற்றோம்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# ஈரோடு கண்டிராத இணையற்ற மக்கட் கடல்!

## 19வது தனி மாகாண மாநாட்டில் பத்தாயிரம் தாய்மார்கள்!

### அர்ச்சுனன் பந்தலில் 50000 காளைகள்! மீண்டும் அறப்போர்!

★

ஈரோடு அக். 23.

இந்த மாதம் 23, 24-ம் நாட்களில் இங்கு 19-வது திராவிடர் கழகத் தனி மாகாண மாநாடு.

இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காகத் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தலைவர்களும் ஆசிரியர்களும், தாய்மார்களும் தோழர்களும் ஆக 21-தேதி முதற் கொண்டே வந்து திரள ஆரம்பித்து விட்டனர்.

மாநாட்டுத் தொண்டர்கள் ரயிலடியிலும், பஸ் ஸ்டாண்டிலும் நின்று, வந்த தோழர்களை வரவேற்று, மாவட்டவாரியாகப் பிரிக்கப்பட்டிருந்த சுமார் 10-இடங்களுக்கு அழைத்துச் சென்று வசதிகள் செய்து கொடுத்தனர்.

**ஊர் மக்கள் கண்டிராத ஒப்பற்ற ஊர்வலம்.**

முனிசிபல் ரெஸ்ட் ஹவுஸிலிருந்து ஊர்வலம் புறப்படுவதை அறிந்த தோழர்களும், தாய்மார்களும் 7-மணி முதலே வந்துகூட ஆரம்பித்தனர். பெரியாரவர்கள், ஏனைய தோழர்களுடன் 9 மணிக்கு அங்கு வந்தவுடன் மேள வாத்தியம் முன் முழங்க, அதன் பின் கருஞ்சட்டைத் தோழர்கள் இயக்க ஒலி முழக்கம் செய்ய பெரியாரவர்கள், தாய்மார்களும். தோழர்களும் புடைசூழ முன் நடந்து செல்ல, பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமி, தளபதி சி. என். அண்ணாதுரை, தோழியர் குஞ்சிதம் அம்மையார், ஆசிரியர் குருசாமி, தோழியர் இந்திராணி பாலசுப்பிரமணியம் ஆகியோர், இரு காளைகள் பூட்டப்பெற்ற "சேரியேட்டில்" அமர்ந்து செல்ல 20000-க்கும் மேற்பட்ட கூட்டமாக, கோட்டை, கருங்கல் பாளையம் வழியாக 5-மைல்களுக்குமேல் சுற்றிப் பகல் 12-மணிக்கு ஊர்வலம் மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தது.

வழியெல்லாம், இரு மருங்கிலும் தலைவர்களைக் காணப் பெருங் கூட்டம். முகத்தில் புன்முறுவல் தவழ, வியப்புணர்ச்சி மேலிட்டு, வாழ்த்தொலி செய்து வரவேற்றனர் பொது மக்கள். தோரணங்களாலும் அட்டைகளாலும் ஆங்காங்கே அழகு செய்யப்பட்டிருந்தது. கருங்கல்பாளையத்தில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின், மாநாட்டுப் பந்தலுக்குப் பக்கத்திலேயே அமைக்கப்பட்டிருந்த உணவு விடுதியில் தோழர்களும் தாய்மார்களும் உணவெடுத்துக் கொள்ள மாநாடு பிற்பகல் $3\frac{1}{2}$ மணிக்குத் தொடங்கியது.

**"அர்ச்சுனன் பந்தல்"**

மாநாட்டுப் பந்தல், புகைவண்டி நிலையத்திற்குப் பக்கத்தில், பெரியார் அவர்களுக்குச் சொந்தமான திடலில் அமைக்கப்பட்டிருந்தது. பந்தலுக்கு முன்னால் பெரியாரவர்களின் நீண்ட உருவம் மின் விளக்குகளோடு அழகுபடுத்தப்பட்டு விளங்க, வாசலில் "அர்ச்சுனன் பந்தல்" எனப் பொறிக்கப்பட்டு அழகாக விளங்கியது.

ஒரு வாரமாய் இடையிடையே பெய்தபெருமழைக்கும் சலியாமல், மாநாட்டை நடத்திஆக வேண்டிய அவசியத்தில், வரவேற்புக் கழகத்தார் மழையோடு போராடிக் கொண்டேபந்தலை அமைத்தார்கள் என்றாலும், பந்தல் மிகுந்தபரப்புடையதாகவும், அழகியதாகவும் அமைந்திருந்தது. ஒலிபெருக்கியும் திறம்பட ஒலிபெருக்கத்தக்கவாறு நன்கு அமைக்கப்பட்டிருந்தது.

சொற்பொழிவு, நாடகம் ஆகியவைகளுக்காக அமைக்கப்பட்டிருந்த மேடையும், கருப்புத்துணி, கொடி, படங்கள் முதலியனவற்றால் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

**துவக்கம்.**

அறுபதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்களின் உற்சாகமான, மகிழ்ச்சியில் பிறந்த ஆரவாரத்திற்கிடையே, பெரியார், தமிழ்ப் பெரியார் திரு. வி. க., தோழர் அண்ணாதுரை, தோழர் என். எஸ். கே. முதலியோர் மேடையை வந்தடைய, நகைச்சுவையரசின் இன்னிசையோடு மாநாடு துவங்கியது.

**கோடியேற்றல்.**

வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் பழனிச்சாமியவர்கள் கேட்டுக்கொள்ள, தோழியர் இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்கள் இப்போதைய இருண்ட நிலையை எடுத்துக்கூறி, இதனின்றும் மீள, எல்லோரும் பெரியார்

[தொடர்ச்சி 15ம் பக்கம்]

ரோஜா முத்தையா

கதை கற்பனை.

சிறுகதை

இரண்டாம் பருவம்

# விதவையின் கடிதம்

போட்டி

எண் 7.

அன்புள்ள தம்பீ!

பலவருடங்கள் கழித்து, இக்கடிதம் உனக்கு எழுதுகிறேன். எவ்வளவோ முயன்று பார்த்தும் முன்பே எழுதும் துணிவு ஏனோ எனக்கு வரவில்லை. வீட்டை விட்டு ஓடிவரமட்டும் துணிவு இருந்ததா என்று நீ கேட்பாய். ஆம், இருந்தது. அது எப்படி எனக்கு வந்தது என்று எனக்கே இன்னும் தெரியவில்லை.

இத்தனை வருடங்களில் நீ என்னைப் பல இடங்களில் தேடியிருப்பாய். என் விதிக்காக நீயும், அப்பாவும், அம்மாவும் எவ்வளவோ நொந்து கொண்டிருப்பீர்கள், எத்தனையோ தெய்வங்களுக்கு வேண்டிக்கொண்டிருப்பீர்களென்பது எனக்குத் தெரியும். ஆனால் அத்தனை தெய்வங்களும் ஒன்றும் செய்ய முடியாதென்பதும், அப்படி உங்கள் ஆசை வார்த்தைக்கு செவி சாய்க்கும் தெய்வம் ஒனறாவது உண்டென்றால் அது சுயநலத்தின் சிகரமாகத்தானிருக்க முடியும் என்பதும், பாவம்! உங்களுக்குத் தெரியாது.

தம்பீ! வீட்டை விட்டு ஓடிவா எனக்கு மனம் துடியாய்த் துடித்தது. என்னை அறியாமலேயே நான் வந்துவிட்டேன். நானா ஓடி வந்தேன்? இல்லையடா. நானாக ஓடிவந்துவிடவில்லை. நான் ஓடிவா வேண்டியிருந்தது. பங்குனி மாத நடுப்பகலில், காயும் வெய்யிலில், மிதியடி இல்லாமல் ஆற்று மணலில் நடக்கும் ஒருவன் தன் மேல் துணியையாவது கீழே போட்டுக் காலின் சூட்டைச் சற்று குறைத்துக்கொள்ள முயலுகிறானல்லவா? நானும் அதையே செய்தேன்.

என்ன? என் உதாரணம் உனக்குப் பிடிக்கவில்லையா? நம் வீடு என்ன சுடும் ஆற்றுமணலா என்று கேட்கிறாயா? ஆம்! எனக்கு அப்படித்தானிருந்தது. உனக்கும் உன் காதலிக்கும், ஏன்? மற்றெல்லோருக்கும்மணம் வீசும் சோலையாகத்தானிருந்தது. ஏனோ எனக்குமட்டும் வேறுவிதமாகத் தானிருந்தது. என் துயரத்தையெல்லாம் சொல்லி அழவேண்டும் என்று அப்பொழுது ஆசையாயிருந்தது. அப்பா, அம்மாவிடம் என் துக்கங்களையெல்லாம் கொட்டிவிட வேண்டுமென்று மனம் துடித்தது. ஆனால் அது கடைசி வரையில் முடியாமலேயே போய் விட்டது.

தம்பீ! எனக்குச் சிறு வயதில் மணஞ் செய்வித்தார்களென்று இப்பொழுது நான் யாரையும் நொந்து கொள்ளவில்லை. மணமான சில நாட்களில் எனக்கு விதவைப்பட்டம் சூட்டினார்கள். அதற்கும் நான் வருந்தவில்லை. ஆனால், அது என்விதி என்று சொல்லிவிட்டார்களே என்னும் மதியீனத்திற்கு வருந்தாமலிருக்க முடியவில்லை. பல வருடங்களாக அம்மாவின் கண்ணீர் வற்றவில்லை. சமூகம் முழுதும் எனக்காக இரங்கிற்று. ஆனால் ஏனோ அதற்குப் பரிகாரம் தேட ஒருவராவது முன்வரவில்லை.

தம்பீ! எனக்கு வீட்டில் எல்லா சௌகரியங்களுந்தானிருந்தன. எல்லோரும் அளவற்ற அன்பை அள்ளி வீசினீர்கள். ஆனாலும் என்ன? அவையெல்லாம் எனக்கு எப்படியிருந்தது? சொல்லட்டுமா? முதல்வகுப்பு அரசியல் கைதிகளுக்கு எவ்வளவு ஏற்பாடுகளுமிருந்தென்ன? அப்படியிருந்தது எனக்கும். உங்களுக்கு விருப்பமான எல்லாவற்றையும் எனக்குக் கொடுத்தீர்கள். ஆனால் எனக்கு என்ன வேண்டுமென்பதை நீங்கள் ஆராயவில்லை. அதில் மட்டும் ஏனோ உங்கள் பகுத்தறிவு தடைபட்டது.

ஒருவரிச்சையைமற்றவர் அறிவதெப்படி? நீ என் உன் இச்சையை மறைத்தாய்? என்று நீ கேட்கலாம். ஆனால் எனக்கு என்ன வேண்டுமென்பதை, நான் மறந்தாலும், என்னைப்பார்க்குமெல்லோரும் அதை நினைப்பூட்டாமல் போவதில்லையே. அதை நானும் சொல்லித்தான் விளக்கவேண்டுமா? என்னைப் பற்றி நான் சிந்தித்தேன். நீரோட்டத்தில் சிக்கிய வலுவற்ற பொருளாக எண்ணிக்கொண்டேன். வெள்ளத்தின் எதிராகச்செல்ல முடியாவிட்டால் வெள்ளத்தோடு போய்த்தானே தீரவேண்டும்?

தம்பீ! என்மனதை மாற்ற எனக்குப் பல சாதனங்கள் அளிக்கப்பட்டன. அதில் ஒன்று இராமாயணம் என்பது உனக்குத் தெரியும். என் நினைவை விட்டு, என் அன்பை ஆண்டவனிடம் செலுத்த இது உதவுமென்று தானே, இதை அப்பா என்னிடம் கொடுத்தார். ஆனால் அதில் நான் ஆண்டவனின் திருவவதாரத்தைக் காணவில்லை. காதல் கடவுளின் எழில் மிக்க உருவந்தான் எனக்குத் தெரிந்தது. கம்பனின் காவியச் சோலையில் நான் தமிழின் மெல்லிய மலரைக் காணவில்லை. ஆனால் நானிழந்த இன்பமலர், என் வாழ்க்கையின் நிறைவுக்கு எவ்வளவு இன்றியமையாததென்பதைக் காண முடிந்தது. வில்லொடித்து மாலையிடுவார் என்று அறியா முன்பே, லோகமாதாவான சீதாபிராட்டியாரே இராமன் பால் காதல் கொண்டு மன்மதன் சுடுசரத்தால் நொந்தாளே. சாதாரணப் பெண்ணான நான் மட்டும் எப்படித் தப்பமுடியும் என்றுதான் எண்ணமிட்டேன்.

தம்பீ! நாம் காட்டில் பர்ணசாலையமைத்து அதில் வசித்திருந்தால், ஒருவேளை நீங்கள் நினைப்பதுபோல் ஆசிரமத்திலேயே என் மனம் அமைதியுற்றிருக்கலாம். ஆனால் மலர்ச்சோலையிலே மணத்தை நுகராதிருக்க முடியுமா? மணத்தில் வெறுப்பு காட்டி நடித்தாலும் மணத்தின் வெப்பம் மனதையும் மாற்றி விடுகிறதே. காதல் மயமான உலகத்தின நடுவே, அடியோடு அப்பற்றொழிந்தவளாக விருக்க நான் என்ன உணர்வற்ற ஜடமா? அல்லது முற்றும் துறக்க வலிவுபெற்ற முனிபுங்கவளா?

தம்பீ! எல்லோரும் என் மீது கடுங்காவல் வைத்திருந்துமென்ன? என் மனத்தின் நிலை எனக்கல்லவா தெரியும். மணம், காதல், இல்லற சுகம், இவையெல்லாம் மின்னலைப்போன்று என் மனதில் ஒளி வீசிக்கொண்டிருக்கும். எப்பக்கம் நோக்கினும்நானிழந்த பொருள்கள் தான் எனக்குத்தென்பட்டன. நான் படித்த கதைகள், கட்டுரைகளிலெல்லாம் நான் அதைத்தான் கண்டேன். ஏன்! உலகமே எனக்குக் காதல்மயமாகப் பட்டது. அதனால் தான் நான் வீட்டை விட்டு ஓடி வந்தேன். பகுத்தறிவுக் கண்கொண்டு பார்த்தேன். சமூகம் எனக்கிழைத்த கொடுமை இமயத்தைப்போல்எனக்குப் பட்டது. என்னைப் போல் இன்னும் எத்தனை சகோதரிகள் துன்புறுவார்களோ என்று ஏங்கினேன்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

## தோழர்களே.

இதற்குமுன் 6 கதைகளையும்

படித்தீர்களா?

இதையும் படியுங்கள்!

இன்னும் 6 கதை

பிரசுரிக்கப்படும்.

அதையும் படியுங்கள்!

பிறகு தீர்ப்புக் கூறுங்கள்!

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# மாநாட்டில் சிதறிய மணிகள்.

★

நமது சென்ற மாநாடு தூத்துக்குடியில் பாட்டாளிகளின் விடுதலை சரித்திரத்தில், உலகப்புரட்சி சரித்திரத்தில் முக்கியமாயமைந்துள்ள மே மாதத்தில் நடைபெற்றது. அதன் பிறகு 5-மாதங்கள் கழித்து அக்டோபர் மாதத்தில் நாம் இன்று இங்கு கூடியுள்ளோம். அக்டோபர் என்பது பாட்டாளி மக்களுடையப்புரட்சிப்போராட்டத்தின் மிக பயங்கரமான ஒரு பகுதியைக்குறிப்பிடும் மாதமாகும். அது எவ்வளவுக்கெவ்வளவு பயங்கரமானதோ அவ்வளவுக்கவ்வளவு முக்கியத்துவமும் வாய்ந்தது. ஏனெனில் அது அவர்களுக்கு வெற்றிகாமாக முடிந்தது. விடுதலை வாங்கித் தந்தது.

சி. என். ஏ.

மே மாதம் விடுதலைக்குவித்திட்டமாதம் என்றால் அவ்வித்து முளை விட்டு வளர்ந்து - மரமாகி பூத்துக் காய்த்தது போல் அக்டோபர் மாதம் ஒரு மாபெரும் புரட்சிப் புயல் வீசப்பட்ட மாதம் ஆகும். சோவியத்ரஷ்யாவில் அடக்குமுறைக்கு ஆளான பாட்டாளி மக்கள் தம் உடலிலிருந்து ரத்தம் ஒழுக ஒழுக தம் தலைவர் முன் நின்று ...இனி ஒருபோதும் சகித்திரோம். எப்பாடு பட்டாயினும், எவ்வளவு கஷ்டத்திற்குள்ளாயினும் இவ்வடக்கு முறையை இக்கொடுங்கோன்மையை ஒழித்தே தீருவோம்'' என்று சூளுரைத்து நின்ற காலம் அது.

நாமும் அதுபோல்தான் நம் தலைவர் கோட்டத்தில் அவர்முன் சூளுரைத்து நிற்கின்றோம். சிறை சென்று அவதிப் பட்டவர்கள், தடியடிக்கு ஆளாகியவர்கள், மற்றும் சர்க்காரின்பல கொடுங்கோன்மைக்கு ஆளாகியவர்கள் என நாம் அதே அக்டோபரில் கூடியிருப்பது கவனிக்கத்தக்கது.

சி. என். ஏ.

பெரியாரவர்கள்ரஷ்யாவிலிருந்து திரும்பியவுடனே, 1932-டிசம்பர் 28, 29 தேதிகளில் இதே ஊரில் பெரியார் வீட்டில் சுயமரியாதை சமதர்மக் கட்சித்திட்டம் என்று ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதில் சொத்துக்கள் யாவும்பொது மக்களின் சொந்த உடைமையாக்கப்பட வேண்டும் என்று நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் தென்னாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி என்ற ஒரு கட்சி, கர்ப்பத்தில் கூட இருந்ததில்லை. அத்தகைய ஒரு புரட்சித் திட்டத்தை வகுத்த ஊரில்தான் இன்று நாம் கூடியிருக்கிறோம்.

எஸ் குருசாமி.

எந்தக் காரணம் கொண்டும் மாநாட்டை ஒத்திவைக்க முடியாத நேரமாகவும் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் மீண்டும் எப்பொழுது இந்தி எதிர்ப்புப்போர் துவக்கம்? ஏன் மார்வாடிக்கடையையும் பகிஷ்கரிக்க நாள் குறிப்பிடக் கூடாது? என்பன போன்ற கேள்விகள் செவிடுபடக்கேட்டவண்ணமாயிருக்கின்றன. ஆகவே தான் நமது தளபதி சர்வாதிகாரி அண்ணாதுரை தலைமையில் மாநாட்டை நடத்தி "வாழ்வு அல்லது சாவு'' என்ற முடிவுகட்டி செயலில் இறங்க அனைவரையும் அழைத்திருக்கின்றோம்.

பி. பழனிச்சாமி.

நாம் எல்லோரும் சிறைச்சாலை நோக்கி யிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், இப்படி ஒரு அநுபவம் ஒரு ஒத்திகைபோல் அமைய நேர்ந்தது மகிழத்தக்கதேயாகும். பண்டமுண்டு போதிய அளவுக்கு. ஆனால் தேவையுள்ள போது கிடைக்கவில்லை. அதுதான் நமக்குகுறை. சிறையிலுள்ள குறையும் இதுதான். தேவையான பொருள் தேவைப் பட்டபோது கிடைக்காது.

ஈ. வி. கே சம்பத்

இது பயணம் சொல்லிக் கொள்ளும் மாநாடு என்றும் பத்திரிக்கையில் தெரிவித்தேன். உண்மையிலேயே எங்களில்ஒருசிலருக்காவது இது பயணம்சொல்லிக்கொள்ளும் மாநாடாகவே அமையக்கூடும் என்று நினைக்கிறேன்.

பெரியார்

இம் மாநாட்டிற்கு நம் அருமைத் தளபதி அண்ணாதுரை அவர்களின் பெயர் தலைமைப் பதவிக்கு பிரரேபிக்கப்பட்டுள்ளது. எண்ணிறந்த வாலிபர்கள் அவரே தலைவராக வரவேண்டுமென்ற ஆசை கொண்டிருந்தனர். வரவேற்புக் கமிட்டியினரும் ஆசைப் பட்டனர். எனக்கும் அந்த ஆசை இருந்தது. ஆகவே வரவேற்புக் கமிட்டியார் என்னைக் கேட்டபோது நான் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டேன்.

பெரியார்.

எங்கு பார்த்தாலும், எப்பக்கம் திரும்பினாலும் ஒரே கருப்பு மயமான காட்சியே கண்ணுக்குப் புலனாகிறது. நான் ஏற்றப்போகும் கொடியும் செங்குருதி தெளிக்கப்பெற்ற கருப்புக்கொடிதான். அக்கருப்பு நம் நாட்டின் இன்றைய இருண்டநிலையையும், அச்சிகப்பு இவ்விருண்ட நிலையைப் போக்க நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சியையும் காட்டுகிறது.

இந்திராணி பாலசுப்ரமண்யம்.

ராஜாக்கள், ஜமீன்தாரர்கள், செல்வவான்கள், கோடீஸ்வரர்கள் இவர்கள் தலைமை வகிப்பது போய் சி. என். அண்ணாத்துரை போன்ற ஒரு சாதாரண பாட்டாளித் தோழர் தலைமை வகிக்கவும், என்போன்ற அதைவிடச்சாதாரணமான ஒரு தோழர் மாநாட்டைத் திறந்து வைக்கவும், உங்களைப் போன்ற பல்லாயிரக் கணக்கான பாட்டாளித் தோழர்கள் பங்கு கொள்ளவுமான நிலை ஏற்பட்டு விட்டது. இது மிகமிக வரவேற்கத்தக்க முன்னேற்றமாகும். இம்முயற்சிக்குக் காரணமான பெரியார் அவர்களைப் பாராட்டவேண்டியதும் நமது முக்கிய கடமையாகும்.

எஸ். குருசாமி.

இது வரைபிரசாரம் செய்து— செய்து சலித்து விட்டோம். இனி ஒன்றன் பின் ஒன்றாக செயலில் இறங்கிவிட வேண்டியதுதான். இங்கு கூடியுள்ள நாமனைவரும் நம் தலைமுறையின் வாழ்க்கையை நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் தியாகம் செய்து கொள்ள வேண்டும்.

பி. பழனிச்சாமி.

பிரிட்டிஷ்காரர்கள் என்னென்ன அடக்குமுறை ஆயுதங்களைக் கையாண்டனரோ அதைவிடக் கேவலமான அடக்கு முறைகளை இவ்வாட்சியாளர்கள் கையாண்டனர் என்றாலும் நாம் அஞ்சினோமில்லை.

ஈ. வி. கே. சம்பத்

ஆட்சியாளரின் அனுமதியின் பேரில்தான் மறியல் நடக்கிறது என்றாலும் அவர்கள் எதுவேண்டுமானாலும் செய்யலாம் என்கிற நிலையில் இருக்கும்போது நாம்

அவர்களின் அடக்கு முறைக்கு ஆளாவதை விட வேறென்ன செய்யமுடியும்?

பெரியார்.

"இம்மாநாடு நமது இயக்கச் சரித்திரத்திலேயே மிக முக்கிய மாநாடாக இருக்கும் என்று கருதுகிறேன். காங்கரஸ்காரர்கள் இந்நாட்டுக்குச் சுதந்தரம் வந்து விட்டதாகப்பறைசாற்றிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், அது உண்மைதானா என்று பரீக்ஷை பார்க்கும் ரீதியில், உண்மையில்லை என்று நிரூபிக்கும் ரீதியில் நாம் ஹிந்தி எதிர்ப்பு மறியலை மீண்டும் துவக்கி நடத்தத் தீர்மானம் செய்யப் போகும் மாநாடு இது.

இந்திராணி பாலசுப்ரமண்யம்.

புரட்சி முழக்கம்செய்ய, உரிமை முழக்கம் செய்ய, நாம் இன்று ஈரோட்டில் கூடியுள்ளோம். இவ்வுரிமைப் போர் துவக்க நிகழ்ச்சி நம் நாட்டுச்சரித்திரத்தில் ஏன் உலக சரித்திரத்திலேயே கூட பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய நிகழ்ச்சியாய் அமையக் கூடியதாகும்.

சி. என். ஏ.

ஒரு காலத்தில் பகுத்தறிவுடைய மக்களாக வாழ்ந்த நாம், இன்று பல ஆரிய மூடநம்பிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டு அறிவிழந்திருக்கிறோம். ஒரு காலத்தில் இந்நாட்டைத் தவிர்த்த ஏனைய பல நாடுகளையும் புகழுடன் அரசாண்ட நம்மவர்கள், இன்று அந்தோ! வெளிநாடுகளில் கால்வயிற்றுக் கஞ்சிக்கு கங்காணிகளாக, கூலிகளாக வேலை செய்து வருகிறார்கள்.

இந்திராணி பாலசுப்ரமண்யம்.

இன்று துவங்கும் இவ்வுரிமைப் போர் நம்ஆயுட்காலத்திற்குள்ளாக வேமுடிவு பெற்று விடும் என்று கூட நம்மால் கருதக்கூட வில்லை. நாம்நடத்துவோம், நம்ஆயுட்காலத்திற்குள் முடியாவிட்டால் நமது பிள்ளைகள், பின் சந்ததியார் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட தொடர்ந்து நடத்தப்பட்டு வரவேண்டிய ஒரு தொடர்கதைப் போராட்டமாகும் இது.

சி. என். ஏ.

சொந்த நாட்டில், சொந்த மொழிக்காக, சொந்த மக்களுடனேயே போரிட்டுத் தீரவேண்டிய இழிநிலையில் நாம் இருக்கிறோம். இதைவிட இருண்ட நிலையையா நாம் காணப்போகிறோம். இவ்விருண்ட நிலை ஒழிந்து நம் நாட்டில் சுதந்தரம் கமழ, நாமெல்லோரும் பெரியார் வழி நின்று பாடுபட்டு வருவோமாக. பெரியாரும் தம் வாழ்விலேயே தாம் நினைக்கும் இன்பத் திராவிடத்தை, செங்கொடி பறக்கும் திராவிடத்தைக் கண்டு களிப்படையட்டும்.''

இந்திராணி பாலசுப்ரமண்யம்.

சர்க்கார் நாளை ஹிந்தியை எடுத்து விடுவார்களானாலும் அதோடு இப்போராட்டம் நின்று விடாது. தொடர்ந்து உரிமை கிடைக்கும்வரை அறப்போர் நடைபெற்றே தீரும்.

சி. என். ஏ.

மறுபடியும் மஞ்சள் பெட்டி குளிக்கலாம், அல்லது ஆரஞ்சைக் காட்டி மக்களை ஏமாற்றி ஓட்டுப் பெறலாம், என்று நினைக்கும் காங்கரஸ்காரர்களுக்கு நாம் புத்தி கற்பிக்கவேண்டும். வடநாடு தென்னாடுப்பிரிவினைப் பற்றி நம்மைக் கிண்டல் செய்து வரும் பத்திரிகைகள், நமது இயக்கத்தின் வளர்ச்சியையும் கட்டுப்பாடாக இருட்டடிப்புச் செய்து வரும் பத்திரிகைகள் இவைகளுக்கும், புத்திவர வேண்டியஅளவுக்கு நமது முயற்சி மேலும் மேலும் பெருகவேண்டும்.

எஸ். குருசாமி.

இந்தியை எதிர்க்கிறோம் என்றால் ஹிந்திமொழியை நாம் எதிர்க்கின்றோம் என்று அர்த்தமில்லை. ஹிந்திமொழியின் மூலம் நம் நாட்டின்மீது சுமத்தப்படும் வடநாட்டு ஆதிக்கம் ஆர்ய பனியாக்களின் ஆதிக்கத்தை எதிர்க்கிறோம் என்றுதான் பொருள்.

எஸ். குருசாமி.

தவிர, என்னுடைய பொறுப்பை ஒரு இளைஞரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நெடுநாளாகவே எனக்கு ஆசை இருந்து வருகிறது. பெட்டிச் சாவி என்னிடம் இருந்தால் ஆபத்து ஒன்றுமில்லை, பந்தோபஸ்துக்கு ஒன்றும் பங்கம் ஏற்பட்டு விடாது என்ற போதிலும் எத்தனை நாளைக்கு நாமே வைத்திருப்பது என்ற அலுப்பு ஏற்பட்டு விடுகிறது.

பெரியார்.

எனவே, சாவியையே கொடுத்து விடுவோம். இளைஞர்களுக்கு உரிமையானதை நாம் என் 70-வது வயது தாண்டியும் சுமந்து திரிய வேண்டும் என்கிற எண்ணம் ஏற்பட்டு விட்டது. வயது ஆக ஆக, தளர்ச்சி அதிகமாகிக்கொண்டு வருகிறது. எனவே முன்போல் காரியம் ஆற்ற முடியவில்லை. இனி ஜெயிலில் நல்ல இடம் பார்த்துக் கொண்டு ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டியதுதான். இனியும் வெளியில் அலைந்து கொண்டிருப்பேனாகில் அது சுத்த பைத்தியக்காரத்தனமாகவே ஆகிவிடும், என்று உணர்ந்து உரிமையாளரிடம் சாவியை ஒப்படைக்க முடிவு கட்டிக்கொண்டேன்.

பெரியார்.

பெரியார் அவர்கள் பெட்டிச் சாவியை என்னிடம் ஒப்படைப்பதாகத்தெரிவித்தார். பொறுப்புள்ள மகனிடம் பெட்டிச்சாவி அளிக்கப்பட்டால் அவன் சாவி கிடைத்ததே என்று தாறுமாறாகவோ, அவசியமில்லாதபோதோ அதை உபயோகித்துக் கொண்டிருக்க மாட்டான். திறக்கும் போதெல்லாம் தந்தையைக் கேட்டுக்கொண்டுதான் திறப்பான். தனக்கு வயது வந்தபிறகும், சாவி தந்தையிடமே இருந்தால் எவ்வளவு சாதுவான மகனுக்கும் கொஞ்சம்அருவெறுப்பு ஏற்படுவது சகஜந்தான். இருந்தாலும் அப்படியொன்றும் கிளர்ச்சி செய்தவன் அல்ல நான்.

சி. என். ஏ.

இயக்கப்பணப்பெட்டியின் சாவியை அவர் என்னிடம் அளித்ததாக நான் கருதிக்கொள்ளவில்லை. மக்களுடைய உள்ளத்தின் சாவியை, சிறைச்சாலைப்பூட்டுச் சாவியை, இதைத் தான் என்னிடம் ஒப்படைப்பதாக நான் கொள்கிறேன். அதை மிக மிக மகிழ்ச்சியோடு உபயோகித்து வருவேன்.

சி. என். ஏ.

அரசாங்கத்தினர் தாமாகவே, நமது முயற்சி எந்தப் பக்கம்திருப்பப்பட வேண்டுமென்பதற்கு வழிகாட்டி விட்டனர். நாம்வேண்டாத இந்தியை நம் நாட்டில் கட்டாயமாக்கி விட்டனர். அதோடு நம் கழகத்தைப் பற்றி விஷமப் பிரசாரமும் செய்யத் தலைப்பட்டுவிட்டனர்.

எஸ். குருசாமி.

இயக்கம் இவ்வளவு வளர்ந்துள்ள இந்நிலையில், நமது கழகம் பெரும் அறப்போருக்கு வலுவில் இழுக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில், நமக்குள் கட்டுப்பாடு வேண்டும். பிளவுக்கு இடங்கொடாத ஒற்றுமை மனப்பான்மை

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

ரோஜா முத்தையா

# "கூடிக் கலைந்தோம்"

[✱]

கூடிக் கலைந்தோம்! ஆம்! நாம் கூடியது வேடிக்கையாகவும் அல்ல; விளையாட்டுக்காகவும் அல்ல! அல்லது அய்யா அவர்களுக்கு ஆயிரக் கணக்கான மக்களின் ஆதரவு நாட்டின் நாலாபக்கங்களிலும் உண்டு என்பதை ஈரோட்டு வாசிகளுக்கு எடுத்துக் காட்டும் நோக்கத்துடன் அல்ல!

நாம் கூடிய நல்ல காரியத்துக்காகப் புராண இதிகாசங்களில் கூறிய புனிதமான திங்களைத் தேடவில்லை. உலக வரலாற்றிலே ஒரு முக்கியத்துவம் வாய்ந்த திங்களில் தான் கூடினோம்.

ஆம்! இம் மாதம்தான் உலகை உருட்டிக்கொண்டிருக்கும் "சோவியத் குடியரசை" நிறுவச், சோகம்நிறைந்த மக்கள் வீரத்துடன் போராடப் புறப்பட்ட திங்கள். அதே திங்களில்தான் நாமும் கூடி இருக்கிறோம்!

ஆம்! சோகம்நிறைந்த மக்கள்தான்! சொல்லொண்ணாத் துன்பங்களுக்கு அல்லும் பகலும் ஆளான மக்கள்தான! குழிவிழுந்த கண்களுடனும், ஒட்டிய வயிற்றுடனும், எலும்புந்தோலுமாக இருந்த அந்த எறுகளை ஏவிவிட்டான் மக்களின் ஆதரவைப் பெற்ற அந்த மாவீரன்! மூண்டது புரட்சி! முடியவில்லை வீணர்களின் தலையை வீழ்த்தும் வரை, அக்ரமக்காரர்களின் அகம்பாவத்தை அடக்கும் வரை, முடியாட்சியை வீழ்த்திக் குடியாட்சியை நிறுவும்வரை!

ஆம்! சாதாரணமான காரியமல்ல! வாய்வேதாந்தம் அடிக்கும் வாயாடிகளால் ஆகக்கூடியது அல்ல அந்தக்காரியம்! இக்காரியத்தைச் சாதிக்க மாபெரும் புரட்சி வீரனுக்கு உதவப் புதுமைப்பித்தன் தேவை! தேடியதை (நினைத்ததை) அறிந்து அறிவுரை பகரக்கூடிய அறிஞர்கள் தேவை! செருக்களம் நோக்கிச் செல்லச் சிங்கங்கள் தேவை!

ஆம்! இவை அனைத்தும் அவசியமானவை! அவசியமானது மட்டுமல்ல, மிக மிக அவசரமானவையுங்கூட!

வருங்காலத் திராவிடத்திற்கு வழி வகுக்கக் கூடிய காலம் வந்துவிட்டது! வழி வகுக்கக் கூடிய காலத்தில் வழக்காடவும் நேரிடலாம் வம்பர்களுடன். ஜனநாயகம் பேசி, 'ஜனநாயகத்துக்கு' சமாதிகட்டும் சாத்வீகர்களுடன், வீராவேசத்துடன் விடுதலை வேட்டையாடவும் நேரிடலாம். பாரதமாதாவின் பக்தர்களின் பாசீச ஆட்சிக்குப் பலர் பலியாகவும் நேரிடலாம்.

இன்று நம் திராவிடத்திற்கு வழி வகுக்க வேண்டுமென்றால் அநேகர் வழுக்கிவிழலாம். சிலருக்கு மண்டையுடையலாம். பலருக்குப் பல்லுடையலாம். அநேகருக்கு அங்க ஈனம் ஏற்படலாம். ஏன்! எண்ணற்ற உயிர்களைக் குடிக்கக்கூட ஆரம்பித்து விடுவாள் சுதந்தர வேஷக்குச் சுந்தரி.

ஆகவேதான், போர் மூளுவதற்கு முன் திராவிடப் பெருங்குடி மக்களை ஒன்று கூட்டி, "உங்களுடைய எதிர்காலம் இப்படி இருக்கும், களம் நோக்கிச் சென்ற காளைகளில் அனேகரை காண்போம் என்று கூற முடியாது இந்தக் காட்டுமிராண்டி ஆட்சியில்," என்பதற்காகத்தான் இம்மாநாட்டைக் கூட்டி, ஒருவரை யொருவருக்கு அறிமுகம் செய்து வைக்கும் முகத்தான் செய்த ஏற்பாடாகும்.

தினவெடுத்த தோள்களுக்கு வேலை தந்துவிட்டார் வெண்தாடி வேந்தர். எங்கள் வேலை என்ன? எங்கள் பணி எது? எப்பொழுது விடுதலைப்போர் துவங்கும்? என்று கடாவிக்கொண்டிருந்த காளைகளுக்கும், வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் அழைப்பு அனுப்பவேண்டிய அரும்பணியில் அமர்ந்துவிட்டார் அய்யா. எப்பொழுது அழைப்பு வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமே ஒழிய, எங்களுக்கு வேலையில்லாத்திண்டாட்டம் விடுதலைப் போரில் ஏற்பட்டு விடுமோ என்று ஏங்கிக்கொண்டிருக்க வேண்டாம்!

அவசியமற்ற இந்திக்கு இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் அவநிலையை உணர்ந்து தங்கள் திட்டத்தைதிருத்தி அமைத்துக் கொண்டாலும், அறிவுக்காக அவர்களிடம் (வடநாட்டானிடம்) காவடி தூக்கும் கயமைக் குணம்அவர்களை விட்டகலாது! மனிதத்தன்மையற்ற மண்டூகங்கள் தீட்டும்திட்டத்தை தலையில் தூக்கிக் கொண்டு, (பரதன் செருப்பைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டது போல) வாயு புத்திரன் மீது ஏறிக்கொண்டு வாயுவேக மனோவேகமாக வரும் வடிகட்டின கெட்டிக்காரத் தனம் அவர்களை விட்டகலாது!

ஆகவே, இது விடுதலைப் போராட்டமே ஒழிய, வெறும் மொழிப் போராட்டமல்ல. ஆரிய திராவிடப் போராட்டம்! இன்று நேற்று ஆரம்பித்தது அல்ல! அநேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு! அப்பொழுது ஆரம்பித்த போரானது புகைந்துகொண்டே இருந்தது.

இன்றைக்குப் பத்தாண்டுகட்கு முன் அது பற்றி எரிய ஆரம்பித்தது. அப்பொழுதே அது தலையில் தண்ணீரை ஊற்றி அவித்தனர் தன்மானத் தமிழர்.

அவித்தனர் என்றால், நெருப்புமுழுவதும் நீத்துப் போகும்படியாக அவிக்கவில்லை. ஆகவே அது அடியில் இருந்து கொண்டு மறுபடியும்புகைய ஆரம்பித்துவிட்டது. இன்றைக்கு அது பற்றி எரிய ஆரம்பித்து விட்டது! எரிகிறது! எரிந்து கொண்டே இருக்கிறது!

எனவேதான், இந்த இந்திஎன்னும் விபச்சாரியை இந்நாட்டில் நடமாடவிடக்கூடாது. நல்லவர்களும் நாசமாகின்றனர். காளைகளை கயமைக்குணத்திற்கு இழுத்துவிடுவாள். எனவே இவளைஎப்படியும்-நாட்டை விட்டுநல்லதனமாகச்சொல்லிப்போகும்படிபார்த்தோம். அவளுக்குப் பெரியஇடத்து ஆதரவு அமோகமாக இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு எக்காளமிட்டுத் திரிகிறாள்.

வலுச்சண்டைக்கும் போகக்கூடாது, வந்த சண்டையையும் விடக்கூடாது என்ற காரணத்தினால் தான் மீண்டும் போரைப் புதுமுறையில் பலவழிகளிலும் துவக்கி இருக்கிறோம் என்று எடுத்து இயம்பிவிட்டது மாநாடு.

செப்பியதை செயலில் காட்டமுடியுமா? என்று எள்ளி நகையாடுகிறார்கள் இந்தி விபசாரியின் கள்ளக்காதலர்கள். செப்பியதை செயலில் காட்டும் திறம் படைத்தோர்தான் நாங்கள்! சொல்லியதை சொல்லியபடிபணியாற்றும் பண்புடையவர்கள் தான் நாங்கள்! என்பதை நிரூபிக்க வேண்டுமானால், தாளமுத்து—நடராசர்கள் இந்திவிபச்சாரியின் கள்ளக்காதலர்களின் கணைகளுக்குப் பலியானது உண்மையானால், இன்று இந்தியாவின் கவர்னர் ஜெனரல் 1938-ல் மூக்கறுபட்டது உண்மையானால், தமிழ் என்றால் எள்ளி நகையாடச்கூடிய அக்காலத்திலேயே உயிரைத் தமிழுக்காக தத்தம் செய்தார்கள் இருவர், சிறைக்கோட்டம் சென்றவர் பலநூறுபேர்களானால், தமிழ்ப்பித்துத் தாண்டவமாடும் இக்காலத்தில் தமிழுக்குத் தாழ்வு என்றால், இன்னுயிரைப் பலிகொடுக்கப் பல ஆயிர இளைஞர்கள் இருக்கும் இக்காலத்தில், "தாய்மொழிக்கே பங்கம் நேரிடில் உடல்பச்சை இரத்தம் பரிமாறிடுவோம்" என்று பண்பாடப் பண்டிதர்கள் இருக்கும் இக்காலத்தில், இந்தி விபச்சாரியை இந்நாட்டை விட்டு ஓட்டமுடியவில்லையென்றால், வருங்கால வரலாற்றில் 20-ம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்தவர்கள் தன்மானத் தமிழர்களின் சந்ததிகள் அல்ல என்று வரலாற்றில் எழுதுவார்கள் என்று எண்ணிவிட்டனர் வருங்காலச் சிங்கங்கள்.

போர்க்களம் அவர்களுக்குப் புதிதல்ல. முதுமையான இடம். ஆண்மையும், அஞ்சாமையும் அவர்களுடைய கருவூலம்.

[தொடர்ச்சி 11ம் பக்கம்]

# குடி அரசு

30—10—48 சனிக்கிழமை.


## மீண்டும் அறப்போர்!

சுயமரியாதை இயக்கத்தின் பேராலும், நீதிக்கட்சியின் பேராலும், திராவிடக்கழகத்தின் பேராலும்பல முறை, பல இடங்களில் மாநாடு கூடியிருந்தாலும், அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் உயர்ந்ததாகவும், திராவிட மக்கள் பெருமைப் படக்கூடியதாகவும் இருந்தாலும், ஈரோட்டில் இந்த மாதம் 23-24ம் நாட்களில்கூடிய 19-வது திராவிடக் கழகத் தனி மாகாண மாநாடு, எல்லாவற்றைக் காட்டிலும், நாட்டு வரலாற்றில் எவரானாலும் முக்கியமாகக் குறிப்பிட்டே ஆகவேண்டிய முக்கியத்துவத்தைப் பெற்று, உண்மையிலேயே தனிமாநாடு என்றே யாவரும் சொல்லத்தக்க விதமாய்ப் பெருஞ் சிறப்போடு நடந்து முடிந்திருக்கிறது.

இந்தத் தனிமாநாடு, மிக மிக அவசரமாய், விரைவில் நடத்தியாக வேண்டும் என்ற முடிவோடு விரைவாக அறிவித்து, விரைவாகவே ஒவ்வொரு காரியங்களும் செய்யப்பட்டது என்றாலும், மாநாட்டு நிர்வாகிகளுக்கு மழை ஒரு பெருந் தொல்லையையும், கஷ்டத்தையும் கொடுத்து விட்டதென்றே சொல்ல வேண்டும். மாநாடு தொடங்குவதற்கு ஒருவாரத்திற்கு முன்னால் தொடங்கிய மழை, பெருமழையாகி, எந்த அளவுக்கு கஷ்டத்தைக் கொடுத்திருக்கவேண்டும் என்பதை மற்றவர்களுக்கும் அறிவிப்பதைப் போல, 23-ம் நாள் மாலையிலும் மழைபெய்து நின்று விட்டது.

இந்தத் தனி மாநாட்டின் அவசியத்தையுணர்ந்து, இதைக்கூட்ட எண்ணிய பெரியாரவர்கள், மழையை ஒருபுறம் எதிர்பார்த்தார்கள் என்றாலும், 50000, 60000 என்று சொல்லத்தக்க விதத்தில் பெருங் கூட்டத்தை எதிர்பார்க்கவேயில்லை. அய்ந்தாறுமாதங்களுக்குமுன்னால் நடந்திருக்கும் தூத்துக்குடி மாநாட்டையும், இயக்கத் தோழர்களின் இயற்கையான வறுமையையும் எண்ணி, 5000 அல்லது 10000 க்கு மேற்பட முடியாதென்றே அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

இப்படியாக மழை ஒருபக்கம் தொல்லை கொடுத்து, எதிர்பார்க்காத நிலையில் வந்துகூடிய தோழர்கள் பெருகிவிடவே, வந்திருந்த இயக்கத் தோழர்கள், முக்கியமாக உணவுக்குச் சிரமப்படவேண்டிய நிலை ஏற்பட்டதென்றாலும், பெரியார் அவர்களின் பேருரைக்குப் பின், அவர்கள் குறைகளை மறந்து விட்டார்கள் என்றே குறிப்பிடலாம்.

நாள்தோறும் உழைத்தே வாழ வேண்டிய பாட்டாளித்தோழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட திராவிடக்கழக மாநாட்டிற்கு—மாநாட்டு நிர்வாகிகள் மழையின் தொல்லையை அறிவித்து, வருகையைக் குறைத்துக் கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருந்தும்—பொருள் நஷ்டத்தை எண்ணாமல்—உடல் கஷ்டத்தைக் கருதாமல் 50000 க்கு மேற்பட்ட இளங்காளைகளும் 10000 க்கு மேற்பட்ட தாய்மார்களும் வந்து கூடினார்கள் என்றால் இதற்கு அர்த்தமென்ன? இதனை வெறும் உணர்ச்சிவேகம் என்றுதான் எப்படி எண்ண முடியும்?

நிறுத்தப்பட்ட போராட்டத்துக்கிடையே, அதாவது இயக்கம் போர்க்களப் பாதையில் பலியாகு படலத்தில் திருப்பப்பட்டிருக்கும் வேளையில், "இதுதான் நாம் ஒருவருக்கொருவர் பயணம் சொல்லிக் கொள்ளும்மாநாடு" என்ற படைத்தலைவரின் அறிவிப்பைக் கேட்டுவிட்டும், இளமையும் ஆர்வமும் நிரம்பிய இளைஞர்களின் பெருங் கூட்டம் வந்து கூடியதென்றால், அதுவும் படைத்தலைவர் எதிர்பார்க்காத முறையில் மாபெருங் கூட்டமாய்க் கூடியதென்றால், உண்மை நிலைமையையுணர்ந்து, செயலாற்றும் தீரமிக்கவர்களாய், வாழ்வு அல்லது சாவு என்ற முடிவுக்கு வந்தவர்களாகவே கூடினார்கள் என்பது நிச்சயம்.

இப்பேர்ப்பட்ட உணர்ச்சியும், உத்வேகமும் நிரம்பிய இந்த மாநாட்டில், செய்யப்பட்ட முடிவுகள் ஒவ்வொன்றும், செயலுக்கு வரவேண்டும் என்கிற தீர்மானங்கள் ஒவ்வொன்றும், இந்த அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

ஹைதராபாத் நெருக்கடியின் பேரினால் ஓமந்தூராருக்குப் பெரியாரவர்கள் அளித்த வாக்குறுதியின் காரணமாக, நம் அறப்போர் நாள் குறிப்பிடாமல் நிறுத்தப்பட்டது. அந்த நெருக்கடி தீர்ந்தவுடனே அதாவது மறு வாரத்திலேயே அறப்போர் என்கிற நிலையுண்டாகி விட்டது. அமைதியான முறையில் அறப்போர் நிகழ்த்துவதற்குரிய பக்குவம் ஏற்பட்டுவிட்டாலும், பள்ளிகளுக்கு விடப்பட்ட "தசரா" விடுமுறை குறுக்கே நின்று தடைப்படுத்தியதால், "மீண்டும் அறப்போர் எப்போது?" என்கிற கேள்வியே எங்கு பார்த்தாலும் இருந்து வந்தது.

இந்தக் கேள்விக்கு தனி மாநாடு அளித்த பதில் இதுதான்.

"ஹைதராபாத் போராட்டத்தின் காரணமாக, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தி எதிர்ப்பு மறியலை மீண்டும் நவம்பர் மீ 1 உ முதல் துவக்கி நடத்த வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது."

மாநாட்டின் மூன்றாவது தீர்மானமான இந்தப் பதில் பிரதமர் ஓமந்தூராருக்கு பிடிக்காததாயிருக்கலாம். அமைச்சர் அவினாசியாருக்கு, ஆக்ரோஷத்தையுண்டாக்கலாம். ஆனால் என்ன செய்வது? பார்ப்பன ஆப்பு இருக்கிறது என்கிற நம்பிக்கையால் "வாலாட்டம்" காட்டிய மந்திரிகள், ஆப்பு நழுவிய பிறகு அவஸ்தைப்பட்டுத்தானே தீரவேண்டும். இந்த இருவருக்கும் மாநாட்டின் 6-வது தீர்மானம மேலும் கசப்பையுண்டு பண்ணலாம்.

"இந்தி நுழைவால் இந்நாட்டுக் கலையும் பண்பும், நாகரீகமும் கெடுவதோடு சிறு குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கே இம்முறைகேடு பயக்கும் என்று மிக மிக வணக்கமாகக் கூறப்பட்டிருந்தும், பிடிவாதமாக இந்தி நுழைப்பை வற்புறுத்திக் கொண்டிருக்கும் ஓமந்தூர் மந்திரி சபையை நாம் வெறுக்கி

றோமென்பதற்கு அறிகுறியாக, பிரதமரும், கல்விமந்திரியும் வெளியூர்களில் சுற்றுப் பிரயாணம் செய்யும் காலத்தில் கருப்புக்கொடிகாட்டிப் பகிஷ்கரிக்கவேண்டுமென்று இம்மாநாடு பொதுமக்களைக்கேட்டுக் கொள்கிறது''

இந்த ஆறாவது தீர்மானம், மாநாட்டில் எழுந்த ஒரு எதிர்ப்பை அடக்கி நிறைவேற்றப்பட்டதாகும். தீர்மானம் கூடாது என்கிற எதிர்ப்பு அல்ல! "மந்திரிகளிலே இருவருக்கு மட்டும்தானா கருப்புக்கொடி? ஏன் எல்லோருக்குமே கருப்புக்கொடி காட்டக் கூடாது? தீர்மானத்தைத் திருத்துங்கள்! எல்லோருக்கும் கருப்புக் கொடி என்று செய்யுங்கள்!'' இவைதான் தீர்மானத்தை எதிர்த்தவர்கள் கூறியது. இருப்பினும், இந்த விவாதங்களுக்குப் பெரியார் அவர்கள் பதில் கூறியபின், எந்த விதமான திருத்தமுமில்லாமல் அசல் தீர்மானமாகவே இது நிறைவேறிவிட்டது.

மந்திரிகளைப் பகிஷ்கரிக்கும் போக்கில், இந்த மாநாட்டில் செய்யப்பட்ட சிறுமாறுதலை, இயக்கத் தோழர்கள், பொதுமக்கள் ஆகியோரைக் காட்டிலும் மந்திரிகள் சற்று எண்ணிப் பார்க்கவேண்டும். காங்கரஸ் மந்திரிகள் யாராயிருந்தாலும், அவர்கள் எந்தக் காரியத்தைச் செய்தாலும், அவைகளை எதிர்ப்பது தான் திராவிடக் கழகத்தின் போக்கு என்பதாகக் கொஞ்சமும் நாணயமோ, யோக்கியதையோ இல்லாத முறையில், பொறுப்புள்ள காங்கரஸ் மந்திரிகள் ஒவ்வொருவருமே சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அறப்போர் தொடங்கிய பிறகு அதுவும் ஆங்காங்கே கழகத்தின் வேண்டுகோளின்படி பொது மக்கள் மந்திரிகளுக்குக்கருப்புக்கொடிகாட்ட ஆரம்பித்தபிறகு ஒவ்வொரு மந்திரிகளும் மிரண்டுபோய், இன்னது தான் பேசுகிறோம் என்கிற நிதானமின்றி, தங்களின் இலாக்கா என்ன? தாங்கள் மக்களிடம் விளக்கவேண்டியது எவ்விஷயம்? என்பதான கவலை கொஞ்சமுமில்லாமல் இந்தி எதிர்ப்பைப் பற்றி ஒரு முகாரிபாடவேண்டுமென்பதிலேயே கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள். அதுவும் கட்டுப்பாடாக, காங்கரஸ் மேலிடத்தின் கட்டளைப்படி செய்து வந்திருக்கிறார்கள்.

எல்லா மந்திரிகளுக்கும் இந்தியைப்பற்றிப் பேசவேண்டிய அவசியத்தையுண்டுபண்ணியிருக்கிறோம் என்பதினால் நாம் ஒரு பக்கம் பெருமையடைந்தாலும், நாட்டின் வெவ்வேறு பிரச்னைகளுக்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பிலிருக்கும் அவர்கள், கூலிக்கு மாரடித்து அழுதாலும், பொது மக்கள்முன் தங்கள் கடமைகளை மறைத்து விடுகிறார்களே, அதாவது தேவையான பிரச்னைகளைப் பேசவேண்டிய நேரத்தில் ஏமாற்றி விட்டுச் சென்று விடுகிறார்களே என்பதை எண்ணும் போது நம்மில் யாரும் வருந்தாமலிருக்க முடியாது.

மேலும், நமது மந்திரிகளின் 'கோயபெல்ஸ்' பொய்ப் பிரசாரத்தை—விஷம வேலையை வெட்ட வெளிச்சமாக்கவேண்டிய பொறுப்பும் நம் மீது விழுந்திருக்கிறது. காங்கரசின் ஆலயப்பிரவேசத் திட்டத்திற்கு, அதற்கு முன்னாலிருந்தே நாம் வளர்த்துப் பெருக்கி வந்த ஆதரவையும், சட்டமான நேரத்தில் தளராமல் காட்டிவந்த ஆதரவையும் யாரும் மறந்துவிட முடியாது. அதுபோலவே ஜமீன் ஒழிப்பு இனாம் ஒழிப்பு மசோதா ஏட்டளவில் அவர்கள் கொண்டு வந்த நேரத்தில், "அவர்கள் கொண்டு வந்தார்களே'' என்ற அசூயை இல்லாமல், நாம் அதை ஆதரிக்கச் சிறிதும் பின்வாங்கவில்லை என்பதையும், நெடுங் காலத்திற்கு முன்னாலிருந்தே நாம் அதைத்திட்டமாகக் கொண்டிருக்கிறோமென்பதையும் அவர்கள் அறிவார்கள். அப்படிப் பலருடைய ஆதரவிருந்தும், நிறைவேற்ற வேண்டிய அவசியமிருந்தும், வடவர்களின் மிரட்டலுக்கும், பார்ப்பனர்களின் சூழ்ச்சிக்கும் பயந்துபோய், இனாம்களை விட்டுவிட்டோம் என்பதையும் அவர்கள் உணர்வார்கள். மேலும் மாகாண முழுதும் மதுவிலக்குத் திட்டம் என்ற போது நாம் அதைப்பாராட்டாமல், வரவேற்காமல், ஆதரிக்காமல் இல்லை. ஆனால் மதிமிக்க நிர்வாகத் திறமை காட்டப்படுவதில்லையே என்றுதான் நாம் எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம். இப்படியாக மக்களுக்கு நன்மையைக் கொடுக்கக் கூடிய எந்தத் திட்டத்தையும் நாம் வரவேற்றும், ஆதரித்தும் வந்திருக்கிறோம். அதே நேரத்தில் அவர்களின் பிற்போக்கான—லாபப் பங்கு கோரும் திட்டங்களை—அடிமை முதிர்ச்சியில் ஆக்கிய திட்டங்களை—அடியோடு ஒழியவேண்டுமென்று சொல்லவும் தவறவில்லை. இப்படி நாம் சொல்லுகிற நேரத்தில் தான் அதை மறுக்கத் திறனற்ற இவர்கள், காங்கரஸ் விரோதிகள், அரசியல் விரோதிகள், கருஞ்சட்டையினர் என்பது போலச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் மக்கள் முன் பித்தலாட்டமாகப் பேசிக்கொண்டு வருகிறார்கள். இப்போதைய நிலையில் மக்கள் அவர்களுக்குக் காட்டுகிற, கருப்புக்கொடி இதற்கு ஒரு காரணம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இன்னும் சொல்லப் போனால், இந்தி மந்திரிகளான கல்வி மந்திரி, பிரதமர் ஆகிய இருவர்தான், இந்தப் பேடித்தனமான கட்டாய இந்தி நுழைப்புக்குக் காரணஸ்தர்களாயிருக்கிறார்கள் என்று, அவ்விருவரை மட்டுமே இந்தக்காரியத்தை முன்னிட்டு பகிஷ்கரிக்கின்றார்கள் என்பதை மற்றவர்களும் நன்றாய் உணர்ந்துகொள்ள, பகிஷ்கரிக்கும் திட்டத்தில் இந்த மாநாடு செய்திருக்கும் மாற்றம், நல்லதொரு சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

இந்த மாறுதலினால்—அதாவது பகிஷ்கரிக்கும் முறையில் ஒரு குறுகிய எல்லையை வகுத்துவிட்டதினால், இந்தி மந்திரிகள் திக்குமுக்காடக் கூடிய வகையில், அவர்கள் எங்கெங்கு சென்றாலும் அங்கெல்லாம் பகிஷ்காரம் வெற்றியோடு நடக்கும் என்று எண்ணுவதால், இந்த மாறுதலை நாம் வரவேற்கிறோம்.

இந்த மாநாடு, அறப்போருக்கு வேறு பல முனைகளையும்திறந்து விட்டிருக்கிறது. திறந்து விட்டிருக்கிறது என்று சொல்லவதைக் காட்டிலும், திறந்து விடும்படியான அவசியத்தை ராமராஜ்ய சர்க்கார் உண்டாக்கிவிட்டது என்று சொல்வதே பொருத்தமாகும்.

ஆச்சாரி சர்க்கார், அட்வைசரி சர்க்கார், வைதீக நீதிக்கட்சி சர்க்கார் ஆகிய இத்தனை சர்க்காருக்கும் முன்னாலேயேயிருந்து நடிக்கப்பட்டு வந்த இரணியன் நாடகத்திற்கு, இந்த ஓமந்தூர் சர்க்காரில் தடை! பல வருஷங்களாய் நடிக்கப்பட்டு வந்த போர்வாள் நாடகத்திற்கு இப்போது தடை! இராவண காவியம் என்ற ஒப்பற்ற பெருநூலுக்கு, இந்த ராமராஜ்ய சர்க்காரில் தடை! இதைக்காணு

ரோஜா முத்தையா

கிற போதுதான், இவர்கள் சொந்தப்புத்தியோடு இவைகளுக்குத் தடை விதிக்கவில்லை, பார்ப்பனர்களின் சொற்புத்தி கேட்டுத் தடை விதித்திருக்கிறார்கள் என்று நாம் வற்புறுத்திச்சொல்லிவரவேண்டியிருக்கிறது. ஏன் அப்படிக்கூறுகிறோமென்றால், இப்போதைய மந்திரிகளில் யாருமே இராவண காவியம் முழுவதையும் படித்திருக்க முடியாது என்பதையும், அப்படி ஒருவேளை அதற்காக ஒரு மாதம் 2 மாதம் செலவழித்து ஒரு சிலர் படிக்க முயன்றிருந்தாலும், அவர்களுக்கு அர்த்தம் விளங்காத பகுதிகள் அனேகமுண்டென்பதையும் நாம் நிச்சயமாகக் கூறுவோம். தமக்கு விளங்காத ஒன்றுக்கு, புரியாத ஒன்றுக்குத் தடை விதிக்கத் துணிந்தார்கள் என்றால் அது சொந்தப் புத்தியோடு செய்த காரியமா? சொற்புத்தியால் செய்த காரியமா?

சர்க்காரின் இந்த நடத்தையைக் கண்டித்து, மாநாடு சர்க்காருக்கு எச்சரிக்கை செய்திருக்கிறது.

‘11. (ஆ) மேற்கண்ட (போர்வாள், இரணியன்) நாடகங்களின் பேரிலும், இலக்கியத்தின் பேரிலுமுள்ள தடையை உடனடியாகச் சென்னை அரசாங்கம்நீக்காவிடில், தடை நீக்குவதற்கான நேரடி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை திராவிடர் கழகத்திற்கு ஏற்படுமென்று இம்மாநாடு அரசாங்கத்தாருக்கு எச்சரிக்கை விடுக்கின்றது’’

இந்த எச்சரிக்கையைத்தான் அறப்போரில் மற்றொரு போர்முனை என்று நாம் குறிப்பிடுகிறோம். எச்சரிக்கையைக் கேட்டு, இந்தச் சர்க்கார் நல்ல போக்கைக் கைக்கொள்ளாது என்பதும், கைக்கொள்ளக் கூடிய நிலையில் அதற்குச் சுயமான போக்கு இல்லை என்பதையும் மாநாட்டுப் பிரதிநிதிகள் அறிவார்கள். அறிந்திருந்தும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள் என்றால், அதனுடைய பின்விளைவு எப்படியிருக்கும் என்பதை அவர்கள் சிந்திக்கவில்லை என்று கூறிவிடமுடியாது. இன்று ஒரு திருவத்திபுரத்திலே நாடகமும், ஒரு கடலூரிலே ஒத்திகையும் என்ற நிலை இருக்கிறதே, அது எத்தனை திருவத்திபுரங்களாக, எத்தனைகடலூர்களாக ஆக வேண்டும் என்கிற கேள்விதான் இந்த எச்சரிக்கை! நாளை வீதிகள் தோறும் இராவணகாவியங்கள்—அதனுடைய சில ஏடுகள் விலை கூவி விற்கப்பட்டால், விளையப்போவது என்ன என்கிற கேள்விதான் இந்த எச்சரிக்கை! இந்த எச்சரிக்கையால், பின் எடுக்கப்படும் நேரடிநடவடிக்கைகள் எப்படி எப்படியெல்லாம் இருக்கும் என்பதை இப்போது நாம் விளக்கத்தேவையில்லை.

மற்றொரு போர்முனைதான், வடநாட்டான் மறியல், புராண சினிமாமறியல். இந்த மறியலுக்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்குமாறு, தலைவர் பெரியாரவர்களை மாநாட்டுப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது 4-வது தீர்மானமாக மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

வடநாட்டான் மறியலைக் குறித்து நாம் சென்ற வாரம்கூடக் குறிப்பிட்டிருந்தோம். புராண சினிமாமறியலின் அவசியத்தைப் பற்றியும் நாம் விளக்கிவந்திருக்கிறோம். ஆகவே அவைகளைப் பற்றி இங்கு குறிப்பிடாமல் தலைவர் பெரியாரவர்களை, மாநாட்டுப் பிரதிநிதிகள் வேண்டிக் கொண்டிருப்பதைப்போல நாமும் வேண்டிக்கொள்ளுகிறோம், இதற்கான திட்டங்களை விரைவில் அளியுங்கள் என்று.

ஆக, வேறு 2, 3 போர் முனைகளுக்குப் போகவேண்டிய அவசியத்தை—வீரத்தோடு போராடியாக வேண்டிய முக்கியத்துவத்தை—சர்க்கார் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதும், அவற்றைநாம் உணர்ந்திருக்கிறோம் என்பதை சர்க்காருக்கும் மக்களுக்கும் அறிவிக்கவும், உருவான திட்டங்களை வகுக்கவும் இந்தத் தனி மாநாடு காரியங்களை ஆற்றி, பெரியாரவர்கள் குறிப்பிட்டது போல் “ஒருவர்க்கொருவர் பயணஞ் சொல்லிக் கொள்ளும் மாநாடாகவே’’ இந்த மாநாடு ஆகியிருக்கிறது.

நவம்பர் 1உ மீண்டும் அறப்போர் என்று மாநாட்டுப் பிரதிநிதிகள் முடிவுகட்டியிருந்தாலும், அந்த நாளில், மதமில்லாத நமது சர்க்காரை “கிரகணம் பிடித்துக் கொண்டு விட்டது, அதனால் பள்ளிகளுக்குவிடுமுறை’’ என்று கூறப்படுவதால் 2உ முதல் மீண்டும் அறப்போர் என்கிற அறிவிப்பைப் படைத்தலைவர் பெரியாரவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஆதலால், நவம்பர் 2-உ முதல் சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூலின் முன் மீண்டும் மறியல் தொடங்கிவிடும், அன்று முதலே இந்தி மந்திரிகள் பகிஷ்காரமும் ஆங்காங்கே நடந்து கொண்டிருக்கும். பிறகு படிப்படியாக, மாநாடு நிறைவேற்றிய ஒவ்வொரு திட்டங்களும், ஒன்றன்பின் ஒன்றாகத் தன் இறுதி லட்சியம் நிறைவேறும் வரை தொடர்ந்து நடைபெறும்.

வாழ்வு அல்லது சாவு என்ற நிலையில் துணிந்து, போர்க்களத்தில் இறங்கிய போர்மறவர்களைப் பாராட்டுகிறோம். இழிவை மறக்கும் அடிமை மோகத்தை, இந்த நாட்டிலிருந்து துரத்த இப்பொழுது காலம் நெருங்கிவிட்டது என்பதை வற்புறுத்திக் கூறுகிறோம். இப்போது சர்க்கார் என்ன செய்யப்போகிறது? மீண்டும் அறப்போரே நடக்கட்டும் என்றால் நமக்குத்தான் என்ன தடை? ஆம்! மீண்டும் அறப்போர்! அது நவம்பர் 2.

★

## இதற்குப் பெயர் என்னவாம்?

அனைத்து இந்திய காங்கரஸ் மகாசபைக்கு, வடநாட்டின் சார்பாகத் தோழர் புருஷோத்தமதாஸ் தாண்டனும், தென்னாட்டின் சார்பாகத் தோழர் பட்டாபி சீதாராமையாவும் போட்டி போட்டதில் தோழர் பட்டாபி அவர்கள் 194 ஓட்டுகள் அதிகமாகப் பெற்று வெற்றியடைந்திருக்கிறார் என்பது அறிந்து நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இதை ஏன் வடநாடு—தென்னாடுப்போட்டி என்று கூறுகிறோமென்றால், தென்னாட்டிலுள்ள அதாவது சென்னைமாகாணத்து மந்திரிகள், தேசியப்பத்திரிகைக்காரர்கள் அத்தனைபேரும் ஒருமுகமாகத் தோழர் பட்டாபியை ஆதரித்து அறிக்கைகள் தலையங்கங்கள் எழுதினது ஒருபக்கமிருந்தாலும், அவர்களெல்லாம் “ஏன் ஒரு சென்னை மாகாணத்தான் காங்கரஸ் தலைவனாகவரக் கூடாது’’ என்கிற உரிமையுணர்ச்சியை வெளிப்படையாக எழுதிக் காட்டியே, இந்த ஆதரிப்பு வேலையைச் செய்திருக்கிறார்கள். அந்த அளவில் நாம் அவர்களுக்கு நம் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், இந்த சந்தர்ப்பத்தில் தோழர் பட்டாபிக்கு, அதாவது “பட்டாபியின் தோல்வி என்

தோல்வி'' என்று காந்தியாரால் சொல்லப்பட்ட தோழர் பட்டாபிக்கு, போட்டியில் தோல்வி ஏற்படுமானால் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு எவ்வளவு ஆதரவாக ஆகிவிடும் என்றுகூட நம் மாகாணப் பார்ப்பனர்கள் மேலிட்டுக்குக் கூறியிருந்தாலும் நாம ஆச்சரியப்படுவதற்கில்லை. எப்படியிருந்தாலும் தோழர் பட்டாபியின் வெற்றியை நாம் வரவேற்கிறோம்.

காங்கரஸ் தலைமைப்பதவியைத் தோழர் பட்டாபி கைப்பற்றியதினாலேயே, நம்முடைய இழிவு அனைத்தும் தீர்வதற்குப் பரிகாரமாக முடியும் என்று நாம் எண்ணவில்லை. ஒரு வேளை ஒத்தூதுவதற்கு மறுப்பாரானால், செல்லாக்காசான கிருபளானி II என்றுதான் பெயர் பெறுவார் என்றே எண்ணுகிறோம். ஆனாலும் நாட்டின் பெயரால் ஒரு போட்டியுண்டாகி, நம் திராவிட நாட்டுணர்ச்சியை வெறுக்கும் ஞானசிகாமணிகள் எல்லாம் அதில் கதாநாயகப் பாகத்தை ஏற்று நடித்திருப்பதைப் பார்க்கும் போது, “இதற்குப் பெயர் என்னவாம்'' என்று நம்மால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

## இளைய குமார பட்டக்காரர் உதயம்.

நமது தளபதி அர்ச்சுனன் அவர்களின் தமையனாரும், பழயகோட்டைபட்டக்காரருமான உயர்திருவாளர் ந. நல்லசேனாதிபதிச்சர்க்கரை மன்றாடியார் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் அவர்களுக்கு ஈரோடு பங்களாவில் 26—10—1948 தேதி காலை-8-30 மணிக்கு ஆண் மகவு பிறந்திருக்கிறது. தாயும், சேயும் நலமாயிருக்கின்றனர்.

பெரியார் அவர்கள் 27-ந் தேதி சென்று பட்டக்காரர் அவர்களை சந்தித்தும் குழந்தையை வாழ்த்தியும் வந்தார்கள்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

வீணர்களை வீழ்த்தி, வெற்றிக்கொடி
நாட்டி, விபீஷணர்களை வீழ்த்தி,
அனுமார்களை அழித்து, சுக்ரீவன்
களை சுக்குநூறாக்கி, வெண்தாடியை
வேந்தராக்கி, அண்ணாவை அமைச்ச
ராக்கி, வாழ்ந்தால் தன்மானத் தமிழ
னாக வாழ்வேன்! இல்லையென்றால்
வீழ்வேன்! வாழ்வு அல்லது சாவு
என்ற முடிவில் முனைந்து விட்டனர்
மாநாட்டுக்கு வந்திருந்த மக்கள்.
ஆம்! கண்டிப்பாக விபீஷணர்கள்
வீழத்தான் போகிறார்கள். வெண்
தாடி வேந்தனாகத்தான் போகிறார்.
அண்ணா அமைச்சராகத்தான் போ
கிறார்.
வெல்க அவர்கள் முயற்சி!

ஓங்குக தமிழ்!!

ஒழிக இந்தி!!!

“தமிழ் பித்தன்”

## ★ ஒரே மூச்சு! ★

ஒரு நாட்டு மக்களையும்-கலையையும்—நாகரிகப் பண்பினையும் குலைக்கக்கருதின், அந்நாட்டு—மொழியை இழிவுபடுத்தும் நோக்கம் போன்ற சாதனங்களைப் பின்பற்றுதல் ஒன்றே போதும்!

இழிவு' என்ற பதம் நீக்கி இந்நாள்வரை, ஏறத்தாழ இரண்டாயிரத்து இருநூறு வருடங்களுக்கு முன்பிருந்தே இன்பம் தரும் மொழிவேறு ஒன்றுண்டென்றாவது, ‘அம்மா’ என்ற அழகிய சொல்லைதந்ததோடல்லாது பெரும் காப்பியவழிகளிலே மேகலை-மணியம்-குண்டலகேசி—வளையாபதி சிலப்பதிகாரம் போன்ற இலக்கியப் பெருக்கினையோட்டியது தமிழே என்பதையும் இது நாள் வரை மறுப்பாரிலை.

சொல்வளமும், சோகச்செழிப்பும், வெல்லும் திறனும்-வேடிக்கை எழிலும் வேங்கடம் முதல் குமரி வரை குதிபோட்டளிக்கும் குமரித் தமிழை குறைகூற வந்தாரிலை.

காலப் போக்கிலே கருத்தின் சாயல் வீதிக்கு வீதி படையெடுக்க, வீட்டிலெல்லாம் வீணர்க்குக்கூட தமிழ் பேசும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. மலர்ச்சியின் எழுச்சிப்போக்கு ஒருவாறு மற்றையநாடுகளைத் தெரியக் காட்டியது.

அந்தப்புது மலர்ச்சியின் இறுதிக் கட்டம் அரசியலிலேயா குபாட்டை வகுத்துவிட்டது.

மூத்தான் இளையானுக்குச் சொல்ல, இளையான் சலுகையிலே தவறை யுணர்த்த, மூத்தான் முறைக்க—மீண்டும் இளையான் எதிர்க்குதிக்க, இந்தச் சிறு சண்டைக்கு தீர்ப்பு தரும் முறையிலே முதன் முதல் புகுந்து வலுத்த சக்திதான் ஆங்கில ஆட்சி!

தீர்ப்பை தரவந்த மாற்று நாகரிகம்!

நம்மை—நம்கலையை—உறவை பாதுகாப்பதாகக்கூறி வஞ்சனையில் வெஞ்சிறைப்புகுத்தியது. சிறைக்கோட்ட அவதியிலே சீரழிந்த நாம் அந்தியக்காலத்திலே அறிவின் இமயம் கண்டோம்.

விழித்தெழுந்தநம்மை மீண்டும் உறக்கத்திலாழ்த்த எத்தனையோ விதவிதத் தாளக்கட்டிலே தாலாட்டுகள் தொகுக்கப்பட்டன! 'கோக்கப்பட்ட தாலாட்டின் சுவை, வந்தவர் கொண்ட கருத்திற்குமாறாக நம்மைமேலும்கிளர்ச்சியிலாழ்த்தியது. கிளர்ச்சியின் புதுமெருகு புரட்சியெனமாறியது.

மாற்றத்தின் இறுதி முடிவு இன்றைய நாடாளும் பரீட்சை—போலிச்சுதந்திரம்!

வந்தசுதந்திர பலிபீடத்திலே வானதிர வாழ்க்கை நடத்த எண்ணும்பெரியான் சிறியானை பழைய போர் நிலைக்கு அழைக்க,- சிறியான் சிந்திக்க-தன் மானம் தழைக்கபோர்ஒன்றைத்தவிரவேறு வழி கிட்ட வில்லை.

எனவே இவனும் முழக்கிவிட்டான் முரசு! இருபுறங்களிலும் முழங்கும் முரசு, ஆக்கம்பெற அதிர்கின்றது.

பலப் பரீட்சையிலே பெரியானின் சுண்டிய இரத்தமும், தளர்ந்த நாம்பும் வெற்றியைவிட்டு நகர்ந்து விட்டன! விடிந்தவுடன் வெற்றி இளையானைச் சார்ந்துவிட்டது. இதுதான் நீதிதந்த நெருக்கடி.

தம்பி அடைந்த வெற்றியிலே தன் தோல்வியும் அறியாமையும் பிரதிபலிப்பதைக் கண்டு அவனின் பண்பைக் கறைப்படுத்த நினைக்கின்றான். அதற்கு வடநாட்டுத் தொடர்பு' புரியாத ‘இந்தி’ என்ற ஒரு நச்சுத்துளியை பால்போன்று தம்பிக்கும்—தனக்கும் தாய்விட்ட தமிழிலே வீசக்கருதி விலை கொடுத்து வாங்குகின்றான்! அதே நச்சுத்துளி தம்பிக்கும் தமையனுக்கும் சொந்தமென இருக்கும் பாற் கிண்ணத்திலே முலாமென பூசப்படப்போவதை எதிர்க்கும் நோக்கம்தான் இந்த இந்திப்போர்.

இனி நடக்கும் இந்தப்போரிலே இளையான் இலேசிலே பின்தங்கப்போவதில்லை. ஏன்? வெற்றி—தவறின் வீரச்சாவு. இவைதான் அவனின் இன்றைய ஒரே மூச்சு!

“அமுதன்”

ரோஜா முத்தையா

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். ஒவ்வொருவருக்கும் வீர உணர்ச்சி, தியாக உணர்ச்சி நிரம்பியிருக்கவேண்டும்.

எஸ். குருசாமி.

ஒவ்வொருவரும் பெரியாரைப் போல் திண்மை பெற்றியங்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் அவரைப் போன்றே நினைத்ததை உடனே செய்யவேண்டும், அதை சிறக்க செய்யவேண்டும்; ஒழுங்காகவும் முறைப்படியும் செய்யவேண்டும் என்கிற ஆர்வம் பிறத்தல் வேண்டும்.

எஸ். குருசாமி.

திராவிட நாட்டுப் பிரிவினை முயற்சிக்கும், ஹிந்தி எதிர்ப்பு முயற்சிக்கும் ஆதரவு அளிப்பதற்கும் மேலாக, காங்கரஸை ஒழிக்க வேண்டுமென்கிற விருப்பத்தில் நம்மையும் தாண்டிச் செல்லும் அளவுக்கு உறுதிபெற்றிருக்கிறார் திரு வி. க. என் காலத்திலேயே காங்கரஸ் அழிந்துவிடுமானால் நான் நிம்மதியாகச் சாவேன், என்று காங்கரஸ்காரர்களின் கூட்டத்திலேயே கூறும் அளவுக்கு உறுதிபெற்றிருக்கிறார் என்று கூறுவோமானால் அது மிகையாகாது.

பெரியார்.

இத் தமிழ் நாட்டில் காங்கரஸ் வளர முக்கிய காரணமாயிருந்தது இவருடைய பேச்சும் எழுத்தும்தான். இவர் இல்லாதிருந்தால் தமிழ்நாட்டுக் காங்கரஸ் இன்னும் ஆங்கில மயமாகத்தான் இருந்திருக்கும். மேலும் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தினரால் பார்ப்பனர்களுக்கு மேடை இல்லாமற்படி செய்யப்பட்ட போது, அவர்களுக்கு மேடை தேடிக் கொடுத்த முக்கியஸ்தர்களில் இவரும் ஒருவர் ஆவார். நானும் அதில் ஒருவன்தான். காங்கரசை வளர்க்க நாங்கள் அன்று செய்த முயற்சி அளவிடற்கரியது. அப்படியெல்லாம் பாடுபட்டு வளர்த்த ஒரு இயக்கம் முடிவில் எங்களுக்கே ஆபத்தாக வந்து முடிந்தது.

பெரியார்.

காங்கரசை இம்மாகாணத்தில் வளரவிட்டதற்காக நாங்கள் ஒரு அளவுக்காவது பிராயச்சித்தம் செய்துகொள்வதென்றால், அதை ஒழிப்பதன் மூலம்தான் செய்ய முடியும். அந்த வேலையைத் தான் நாங்கள் செய்துவருகிறோம். செய்யத்தவறிவிட்டால் எங்கள் பின் சந்ததியார் எங்கள் மீது குற்றம் சாட்டநேரும் என்றுஅறிந்தே இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

பெரியார்.

சிறைச்சாலைக் கதவுகளின் வழியே தாராளமாக மக்களை உள்ளே செல்லவிடுவேன். தைரியமாக வாருங்கள் என்று அழைப்பேன். அவசியமானபோது அக்கதவுகளைப் பூட்டியும் விடுவேன். தற்போது பூட்டித்தான் இருக்கிறது, ஏன்? மறியல் நிறுத்தப்பட்டுள்ளது. ஜெயிலுக்குச் செல்ல ஆள் கிடைக்காததாலா? மறியலுக்குப் பொது மக்களிடத்திலிருந்து ஆதரவு கிடைக்காததாலா? அல்லது ஹிந்தி எதிர்ப்புக் கூட்டங்களுக்கு பொதுமக்கள் திரண்டு வராததாலா?

சி. என். ஏ.

மறியல் வளர்ந்துகொண்டே வருவதை எப்படித் தடுப்பது என்று தெரியாமல் ஆட்சியாளர்கள் சட்டப் புத்தகங்களைப் புரட்டிப் புரட்டி இந்த செக்ஷனைப் போடுவதா, அந்த செக்ஷனைப் போடுவதா என்று ஆருடம் பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில்தான் நிறுத்தினோமே ஒழிய, அறப்போரில் அலுப்புத் தட்டியதாலோ, சிறை வாழ்வில் சலிப்பு ஏற்பட்டுப்போனதாலோ, அல்லது எங்கள் பலத்தில் நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டதாலோ அல்லவே.

சி. என். ஏ.

இவ்வூர் நகராண்மைக் கழகத்தவர்கள் போதிய வசதிகள் தந்து ஒத்துழைத்தும் இவ்வூர் செல்வவான்கள் எல்லோரும் எல்லா உதவிகளைச் செய்தும் வந்தவர்களுக்கு போதிய திருப்தி அளிக்க முடியாமற் போனதற்குக் காரணம் எனதுதப்புக்கணக்குத்தான். அதற்காக என்னை மனமார மன்னிக்க வேண்டுமென்று வணக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எனது அழைப்பிற்கிணங்கி இவ்வளவு பெருவாரியாக வந்து பெருமைப்படுத்தியதற்காக நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். கழகத்தின் சார்பாக நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியார்.

●

நடக்கவிருப்பவை.

## திருமணம்.

★

ஜி. கல்லுப்பட்டி தோழர் பி. நடராஜனும், அய்யப்பநாய்க்கன்பட்டி தோழியர் பி. சின்னத்தாயம்மையும், 7—11—48-ல் சி. காத்தான் அவர்கள் முன்னிலையில் திருமண ஒப்பந்தம் செய்துகொள்வார்கள்.


## படித்துவிட்டீர்களா?

(●)

இந்தி எதிர்ப்புக் கவிதைகள்!
"சிரிக்கும் வையம்" விலை அணா 0—4—0

உணர்ச்சியூட்டும் இயக்கப் பாடல்கள்!
"திராவிடநாட்டுப் பிரிவினைப் பாடல்கள்" 0—6—0

பெரியாரின் சங்கநாதம்!
"தில்லையில் பெரியார்" விலை அணா 0—8—0

அறிவுக்கு விருந்தான ஆராய்ச்சி நூல்!
"நரகாசுரப் படுகொலை" விலை அணா 0—12—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்குமிடம்:—
நாதன் கம்பெனி, கச்சேரி வீதி, ஈரோடு.


ரோஜா முத்தையா

# ஈரோடு தந்த — — முடிவுகள்.

★

### ஜின்னாவிற்கு இரங்கல்.

1. பாகிஸ்தான் நாட்டை நிறுவிய வரும், பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலுமான காயிதே ஆஜம் முகம்மதலி ஜின்னா அவர்களின் மறைவு குறித்து இம்மாநாடு வருந்துவதோடு, அன்னாரின் குடும்பத்திற்கும், பாகிஸ்தான் முதலமைச்சருக்கும் தன்னுடைய ஆழ்ந்த அநுதாபத்தை இம்மாநாடு தெரிவித்துக் கொள்கிறது.

### சிறைப்பறவைகளைப் பாராட்டல்.

2. (அ) இந்தி எதிர்ப்பு மறியல், கவர்னர் ஜெனரல், கவர்னர், மந்திரிகள் பகிஷ்காரம் ஆகியவற்றின் காரணமாக இது வரை சிறை சென்றவர்களை இம்மாநாடு பாராட்டுகின்றது.

(ஆ) இயக்கத் தோழர்களை வேறு பல காரணங்காட்டி ஜாமீன் கேட்பது முதலிய கொடுமைகளுக்கு ஆளாக்கும் முறையில் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் நசுக்கும் கொள்கையை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

### மீண்டும் அறப்போர்!

3. ஹைதராபாத் போராட்டத்தின் காரணமாக, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹிந்தி எதிர்ப்பு மறியலை மீண்டும் நவம்பர் மீ 1 வ முதல் துவக்கி நடத்த வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தம்பீ! எனக்கொரு துணைவர் கிடைத்தார். என் வாழ்வுக்குமட்டு மல்ல, என் பகுத்தறிவுக்குந் தான். என் நொந்துபோன உள்ளம் தளிர்த்து விட்டது. என் இழந்த காதல் புத்துயிர் பெற்றுவிட்டது. புதுமை மலிந்த ஒரு புது உலகத்தில் நான உலாவுகிறேன். "என் கற்பு கெட்டுவிட்டது. நம்குலத்திற்கு இழுக்கு வந்துவிட்டது" என்று நீ வருந்தலாம். இல்லை தம்பீ! பகுத்தறியும் ஆற்றல் உனக்கிருந்து, விதியென்னும் வாதத்தை விட்டு யோசித்தால், என்னைப் போன்ற விதவைகளுக்கு சமூகம் செய்த சதி விளங்கும். அப்பொழுது உனக்கும் விளங்கும் 'நான் சென்றது இயற்கையின் வழியில்தான்' என்று.

உன் குறைவற்ற அன்புள்ள,

### வடநாட்டான் மறியல்! புராண சினிமா மறியல்!

4. திராவிடநாட்டுப் பிரிவினைத் திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்காகவும், பிரிவினை ஏற்படுவதனால் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகளை மக்கள் விளங்கிக் கொள்வதற்காகவும், வட நாட்டான் சுரண்டலிலிருந்து இம்மாகாண மக்களைக் காப்பாற்றுவதற்காகவும், வடநாட்டான் வியாபார நிலையங்களின் முன்பு மறியல் நடத்தவும் பகுத்தறிவு பரவுவதற்குத் தடையாக மூடநம்பிக்கை மக்களிடை மேலும் மேலும் வளர்வதற்கான முறையில் புராண சினிமாக்களை மறியல் நடத்துவதற்கும் ஆன முறையில் தக்க திட்டங்களை வகுத்துக் கொடுக்குமாறு தலைவர் பெரியாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

### பிரிவினையை வற்புறுத்தல்.

5. இந்நாட்டில் இயற்கை வளங்கள் மிகச் சிறப்புற்றிருந்தும், மத்யசர்க்கார் என்ற பிணைப்பில் இந்நாடுகட்டுப்பட்டிருக்கிறபடியால் வட நாட்டிலிருந்து இங்கு வந்து சுரண்டும் மார்வாரி, குஜராத்தி முதலியவர்களின் சுரண்டுதல்களின் காரணமாக, இந்நாட்டில் தொழில் வளம் வளர்ச்சி பெற முடியாத நிலையில் மத்திய சர்க்காரின் தொழில் திட்டங்கள் அமைந்திருப்பதினாலும், இந்நாட்டுமக்களின் எதிர்கால வாழ்வு செம்மையாக்கப்பட வேண்டுமென்றால் இத்திராவிட நாடு தனி நாடாகப் பிரிந்தாக வேண்டும் என்றும், திராவிடர் கழகத்தின் அடிப்படைத் திட்டத்தை மீண்டும் இம்மாநாடு வற்புறுத்துகிறது.

### இந்தி மந்திரிகளைப் பகிஷ்கரி!

6. இந்தி நுழைவால் இந்நாட்டுக் கலையும், பண்பும், நாகரிகமும் கெடுவதோடு சிறு குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கே இம்முறை கேடு பயக்கும் என்று மிக மிக வணக்கமாகக் கூறப்பட்டிருந்தும், பிடிவாதமாக இந்தி நுழைப்பை வற்புறுத்திக் கொண்டிருக்கும் ஓமந்தூர் மந்திரி சபையை நாம் வெறுக்கிறோமென்பதற்கு அறிகுறியாக பிரதமரும், கல்வி மந்திரியும் வெளியூர்களில் சுற்றுப்பிரயாணம்செய்யும் காலத்தில் கருப்புக் கொடி காட்டி பகிஷ்கரிக்க வேண்டுமென்று இம்மாநாடு பொது மக்களைக் கேட்டுக் கொள்கிறது.

### தடையை மீறு! எதிர்வழக்காடேல்!

7. இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக மீண்டும் மறியல் துவக்கப்பட்டு அது சம்பந்தமாக மறுபடியும் பிரசாரம் முதலியவைநடைபெறுகிற காலத்தில், சர்க்காரால் கூட்டங்களுக்குத் தடை முதலியவைகள்விதிக்கப்பட்டால், அப்படிப்பட்ட தடைகளை மீறவேண்டியதென்றும், சர்க்காரால் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டால் இயக்கத் தோழர்கள் எதிர் வழக்காடக் கூடாதென்றும், அப்படிக்கைது செய்யப்படும் தோழர்கள் யாரும் ஜாமீனில் வெளிவரப் பிரயத்தனப்படக்கூடாதென்றும், வழக்கில் அபராதம் விதிக்கப்பட்டால் செலுத்தக்கூடாதென்றும், வழக்கின் நேரத்தில் நிலையை விளக்கி கோர்ட்டில் ஸ்டேட்மெண்டு மட்டும் கொடுக்கலாமென்றும் இம்மாநாடு இயக்கத்தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

### டாம்பீக மைனர் சர்க்காரைக் கண்டித்தல்.

8. இந்தியா ஏழைநாடு என்று கூறிக்கொள்ளும் காலத்தில் காங்கரஸ்காரர்கள் தங்களின் ஆட்சியில் கவர்னர் ஜெனரல்களுக்கும் வெளிநாட்டுத்தூதுவர்களுக்கும் பல ஆயிரக்கணக்கான சம்பளங்களை வாரிக்கொடுத்தும்வெளிநாட்டுத் தூதுவர்கள் மிகமிக ஆடம்பரமாகச் செலவு செய்ய அநுமதித்துக் கொண்டும் இருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

### மக்கள் ஆட்சிக்கு வழிகோலுக!

(9) ஹைதராபாத்போராட்டத்தில் இந்திய யூனியன் சர்க்கார் அடைந்த வெற்றியைக் கண்டு இம்மாநாடு மகிழ்ச்சியுறுவதோடு ஹைதராபாத்தின் எதிர்கால அரசியல் அச்சமஸ்தான மக்களின் விருப்பம் போல் அமைக்க வேண்டுமென்றும் மன்னர் ஆட்சிக்கு ஆதரவு தரக்கூடாதென்றும் இம்மாநாடு விரும்புகிறது.

### இனாம்களை ஒழிக்க இன்னொரு மசோதா.

10. ஏழை விவசாயிகளைக் காப்பாற்றவும், அவர்களின் வாழ்க்கையை உயர்த்தவும், ஜமீன் இனாம் ஆகியவைகளை ஒழிக்க நாடு முழுமையும் பிரச்சாரம் செய்தும் மக்களின் முழு ஆதரவும் ஜமீன், இனாம் ஒழிப்புக்குச் சாதகமாக இருந்தும் ஜமீன், இனாம் ஒழிப்பு மசோதாவிலிருந்து இனாம்களை நீக்கி விட்டது கண்டு இம்மாநாடு சர்க்காரைக் கண்டிப்பதோடு இனாம் ஒழிப்புக்காக விரைவில் ஒரு மசோதா கொண்டுவர வேண்டுமாய் சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

### அநீதியைக் கண்டித்து, எச்சரிக்கை!

11. (அ) போர்வாள், இரணியன் அல்லது இணையற்ற வீரன் ஆகிய பகுத்தறிவு நாடகங்களுக்கும் இராவணகாவியம் என்னும் இயக்க நூலுக்கும் தடை விதித்ததானது மக்களின் அறிவு வளர்ச்சியையே தடை செய்வதாகுமென்று இம்மாநாடு கருதுவதோடு சென்னை அரசாங்கத்தின் இவ்வநீதியான கோரிக்கையை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) மேற்கண்ட நாடகங்களின் பேரிலும், இலக்கியத்தின் பேரிலுமுள்ள தடையை உடனடியாகச் சென்னை அரசாங்கம் நீக்காவிடில் தடை நீக்குவதற்கான நேரடி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை திராவிடர் கழகத்திற்கு ஏற்படுமென்று இம்மாநாடு அரசாங்கத்தாருக்கு எச்சரிக்கை விடுக்கின்றது.

(இ) திருவத்திபுரத்திலும், கூடலூரிலும் அரசாங்கத்தாரின் உத்தரவை மீறி "இரணியன்" நாடகம் நடத்திச் சிறைசென்ற தோழர்களை இம்மாநாடு பாராட்டுகின்றது.

### கழக உறுப்பினர் கடைப்பிடிக்க!

12. திராவிடர் கழக உறுப்பினர்கள் அனைவரும் எந்தவிதமான மதக் குறிகளை அணிதல், விக்ரக ஆராதனை செய்தல், பார்ப்பன அர்ச்சகர்கள் உள்ள கோயிலுக்குச் செல்லல், மத சம்பந்தமான விழாக்களில் கலந்துகொள்ளுதல், மத சம்பந்தமான நாடகம், சினிமா முதலியவைகளுக்குச் செல்லுதல் ஆகிய செயல்களை வெறுத்து விலக்கவேண்டுமென்று இம்மாநாடு கழக அங்கத்தினர்களைக்கேட்டுக்கொள்ளுகிறது.

### மதுவிலக்கைப் பாராட்டுகிறோம். ஆனால்............

13 (அ) இந்திய யூனியன் சர்க்கார் எதிர்த்தும் இம் மாகாண மக்களின் நன்மைக்காக மதுவிலக்கு திட்டத்தை சென்னை மாகாணம் பூராவும் அமுலுக்குக் கொண்டு வந்த ஓமந்தூர் மந்திரி சபையை இம்மாநாடு பாராட்டுகிறது. மதுவிலக்குத் திட்டம் சரியாக அமுல்நடத்த போதிய எச்சரிக்கையோடு சர்க்கார் தங்கள் நிர்வாகத்தை நடத்தவேண்டுமென்று இம்மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

(ஆ) மதுவிலக்கு அமுலிலிருக்கும் பிரதேசங்களில் ஜனங்களுக்கு உற்சாகம் அளிப்பது என்ற பேரால் ஏராளமாக சினிமா நடத்துவதற்கு அனுமதி கொடுத்திருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறதோடு சினிமாக்களின் பேரால் ஏழை மக்களின் பணம் சினிமாக்காரர்கள் சுரண்டுவதற்கு வழி செய்து கொடுத்திருக்கும் இம்முறையை உடனே ரத்துசெய்து குறைந்த அளவு லைசென்ஸுகள் மட்டும் சினிமாக்காரர்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று இம்மாநாடு அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றது.

(இ) மதுவிலக்கு அமுலுக்கு வந்ததினால் தொழிலில்லாமல் பாதிக்கப்பட்டிருக்கும் கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கு சர்க்கார் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சு மூலமும் தொழில் தேடித் தரும் ஸ்தாபனங்களின்மூலமும் வேலை தேடிக்கொடுத்து அத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கை அமைத்துக் கொடுக்குமாறு இம்மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்வதோடு இம் முயற்சியில் சர்க்கார் உடனடி நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தக்க கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று பொது மக்களை இம் மாநாடு வேண்டிக்கொள்கின்றது.

### மீண்டும் கன்ட்ரோலால் விளைந்த கேடுகள்!

14. (அ) சர்க்காரால் மீண்டும் புகுத்தப்பட்ட ஜவுளி நூல் கன்ட்ரோல் திட்டத்தின் பேரில் வியாபாரிகளைத் தேர்ந்தெடுக்கக் கையாண்ட முறையில் உண்மையுடையவர்க்கும், ஒழுங்கானவர்களுக்கும், பரம்பரையாய் வியாபாரம் செய்தவர்களுக்கும் லைசென்ஸ் இல்லாமல் செய்தும், ஆலோசனை சபையின் அங்கத்தினர்கள் தங்களுக்குவேண்டியவர்களுக்கும், எலெக்ஷனில் தங்களுக்குச் சாதகமாய் இருந்தவர்களுக்கும், கள்ள மார்க்கட்காரர்களுக்கும்லைசென்ஸ்கள் வழங்கும் மாதிரியில் வியாபாரிகளின் தேர்வு நடைபெற்றிருப்பதால், பொது மக்களின் உடைப்பஞ்சத்தை தவிர்க்க மீண்டும் புகுத்தப்பட்ட கன்ட்ரோல் நாணயக்குறைவும் ஒழுக்கக்குறைவும் ஏற்படும் மாதிரியில் வியாபாரிகளின் தேர்வு அமைந்திருப்பதால் பொது மக்களின் நன்மையைக்கருதி மேற்படி முறையை உடனடியாக மாற்றியமைத்து நாணயமான வியாபாரிகளை நியமிக்க தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இம்மாநாடு சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) சர்க்காருடைய தவறுதலான ஜவுளி கொள்கையினால் நூல் வினியோகம் சரியாக நடைபெறாததினால் மாகாணத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள் தங்கள் தேவைக்கு வேண்டிய நூல் கிடைக்காமையினால் மிகவும் கஷ்டத்திற்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது கண்டு இம்மாநாடு பெரிதும் வருந்துவதோடு மிகவும் தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கிற மாகாண நெசவாளிகளின் வாழ்க்கை நிலையைச் சரிப்படுத்தத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இம்மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

### மதவிடுமுறை மதமில்லாத சர்க்காரிலா?

15. மதமில்லாத சர்க்கார் என்று சொல்லிக் கொள்ளும் இந்திய யூனியன் சர்க்கார் மத சம்பந்தமான நாட்களுக்காக விடுமுறை விடுவதானது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறபடியால் மத சம்மந்தமான நாட்களுக்கு விடுமுறை விடுவதை நிறுத்த வேண்டுமாய் இம்மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

### இராமாயண எதிர்ப்பைத் தீவிரமாகச் செய்!

16. இராமாயணம் திராவிட மக்களை இழிவுபடுத்தும் புராணம் ஆதலாலும் மதத்தின் பேரால் மக்களிடையே புகுத்தப்பட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்கு பல விதங்களிலும் தடை யேற்படுத்தியதோடு மூடப்பழக்கங்களை மக்களிடையே வளருவதற்கு இராமாயணமே காரணமாயிருப்பதனால் இராமாயண எதிர்ப்புப் பிரசாரத்தைநாட்டில் தீவிரமாக நடத்த வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

### உள்நாட்டு அகதியை ஒழிக்க வழி?

17. ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து உணவு பொருள் கிடைப்பதற்கு வழியின்மையினால் தம் தம் குடும்பத்தோடு, திக்கற்ற அகதிகளாய்க்கிளம்பி தஞ்சை மாவட்டத்திற்கு இலட்சக்கணக்கில் வந்துள்ளதினால் இரு மாவட்ட வாசிகளுக்கும் தொல்லை மிகுந்து வருவதால் அத்தகைய நிலைமை மாறும்படி அகதிகளுக்குஅவர்களுடைய மாவட்டத்திலேயேவேலைக்கும் உணவுக்கும் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென இம்மாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கின்றது.

### வடநாட்டு அகதிகளால் வாதை வளர்கிறது!

18. வட நாட்டிலிருந்து மேலும் மேலும் வந்து கொண்டுள்ள அகதிகளால், அவர்கள் நம் நாட்டில் குடியேறியுள்ள பகுதிகளெல்லாம் வீட்டு நெருக்கடியும், அமைதிக்குக் கேடும், ஒழுக்கக் கேடும் வளர்வதாலும் அகதிகட்கு உதவி யென்கின்ற பேரால் அரசாங்கத்தின் செல்வம் பாழாக்கப்பட்டு வருவதாலும், வியாபாரத்தின் மூலம்மேலும் மேலும் இந்நாட்டைச் சுரண்டுவது அடமாவதாலும், அவ்வகதிகள் நம் திராவிட நாட்டில் மேலும் குடி ஏற்றப்படுவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

[3ம் பக்கத் தொடர்ச்சி]

வழி நின்று தொண்டாற்றவேண்டுமென விளக்கி கழகக் கொடியை ஏற்றுவித்தார்கள்.

**திறப்பு விழா.**

அடுத்து, ஆசிரியர் எஸ். குருசாமியவர்கள், இன்றைய அரசாங்கமே நம்மைப் புதியபாதையில்—போராட்டப்பாதையில் செல்லத்தூண்டுகின்றதென்றும், இப்போராட்ட வாழ்வில் நாம் பெரிதும் கட்டுப்பாட்டோடு ஒற்றுமையோடு நிற்க வேண்டுமென்றும், திராவிடத்தோழர் ஒவ்வொருவருமே ஒவ்வொரு பெரியாராக உழைத்துப் பணி செய்ய வேண்டுமென்றும் கூறி மாநாட்டைத் திறந்து வைத்தார்கள்.

**வரவேற்பு.**

பிறகு தோழர் பி. பழனிச்சாமி அவர்கள் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்த, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் மாநாடு மிகவும் அவசரமாகவும், முன்னேற்பாடு இல்லாமலும் கூட்டப்பட்டிருப்பதால், தொல்லைகளைக் கண்டு கலங்காமல், இதை ஒரு சிறை ஒத்திகையாக எண்ணி மகிழ்ச்சியோடு ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தோழர் கே. கே. நீலமேகம் அவர்களை, தலைவரை முன்மொழிவதற்காக அழைத்தார்.

தலைவரை முன்மொழிந்தும், அதை ஆமோதித்தும் தோழர்களான கே. கே. நீலமேகம் அவர்களும், ஏ. சித்தையன் அவர்களும், என். ஜீவரத்தினம் அவர்களும் பேசப், பின் பெரியாரவர்கள் பிரரேபணையை ஆதரித்தும் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களும், நகைச்சுவையரசு என். எஸ். கே. அவர்களும் தோழர் எம். ஆர். ராதா குழுவினரும், தோழர் கருணாநிதி குழுவினரும் மாநாட்டில் கலந்து கொண்டமைக்கு மகிழ்ச்சியையும் நன்றியையும் கூறி, கலந்துகொண்டதன் சிறப்பையும் எடுத்துக் கூறினார்கள்.

முக்கியமாக, இனி இளைஞர்கள் கையிலேயே சகலமும் ஒப்படைக்க வேண்டும் என்கிற விருப்பத்தினால்தான் சி. என். ஏ. அவர்களை தலைமை வகிக்கக் கேட்டுக்கொண்ட வரவேற்புக் கமிட்டியின் விருப்பத்திற்கு ஒப்புக் கொண்டதாகவும், இளைஞர்களின் உள்ளங்களிலெல்லாம் தோழர் சி. என். ஏ. எவ்வளவு தூரம் குடிகொண்டுள்ளார் என்பது தமக்குத் தெரியுமென்றும், மாநாட்டில் ஏற்படும் சில்லரைத் தொந்தரவுகளுக்குத் தம்மை மன்னிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள்.

**தளபதியின் முழக்கம்!**

பிறகு, தளபதி சி. என். அண்ணாதுரையவர்கள் தலைமையேற்று, திராவிடர் கழகத் திட்டத்தை விளக்கி, அது யாருக்கும் விரோதமான ஸ்தாபனமன்றென்றும், தன் முயற்சிக்கு முட்டுக்கட்டைகளாயிருக்கும் எவரையும் அது முறியடித்தே ஆக வேண்டியதாயிருக்கிறதென்றும், விரைவில் அறப்போர்—நவம்பர் முதல் நாளே அறப்போர் துவங்கப் பெரியாரவர்கள் ஆணையிட்டுவிட எதிர்பார்க்கிறேன் என்றும், அது ஒன்றே இந்த மாநாட்டிற்குப் பயனாக இருந்தாலும் போதுமென்றும் கூறி, போராட்டத்தில் அனைவரும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறினார்கள்.

**கலைவாணர் என். எஸ். கே.**

அடுத்து, கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் காந்தியார் படத்தைத் திறந்து வைக்கும் முறையில், மாநாட்டுக்கெனப்பாடி வந்தபாட்டுக்களோடு, பேசிக்கொண்டிருக்கும் போதே மழை ஆரம்பித்துவிட, மிகச் சுருக்கமாகவே முடித்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

இன்று பெய்த இந்த மழை, உணவை உண்ணவோ, தங்கவோ, வெளிச்செல்லவோ பெரும் கஷ்டத்தையுண்டு பண்ணினும், தோழர்களும், தாய்மார்களும் வெற்றியோடு அதைச்சமாளித்துக்கொண்டார்கள்.

**நடிகவேள் நாடகம்.**

இரவு 10 மணிக்கு நடிகவேள் தோழர் எம். ஆர். ராதா அவர்களின் "மகாத்மா தொண்டன்" என்னும் நாடகம் தொடங்கி விடியற்காலம் 4-மணிக்குச் சிறப்பாக முடிந்தது. இந்த நாடகத்தால், விரோதமான மனப்பான்மை கொண்டிருந்த சிலரும், மனதை மாற்றிக் கொண்டார்கள் என்பது உறுதி. நாடகத்திற்குத் தலைமை தாங்கிய தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் நடிகர்களைப் பாராட்டிப் பேசினார்.

ஈரோடு. அக். 24.

இன்று காலை 9-மணிக்கு மாநாடு மீண்டும் தோழர் சி. என். ஏ. தலைமையில் தொடங்கியது.

**படத்திறப்புகள்.**

பொதுவுடமைத் தோழர் சிங்காரவேலர் அவர்களின் படத்தைத் தோழர் என். வி. நடராசன் அவர்களும், சர். தியாகராயர் அவர்களின் படத்தைத் தோழர் தி. பொ. வேதாசலமவர்களும், அன்னை நாகம்மையார் அவர்களின் படத்தைத் தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்களும், தோழர்கள் தாளமுத்து—நடராசன் படத்தைத்தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியவர்களும், சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம் அவர்களின் படத்தைத் தோழர் ஏ. சித்தையன் அவர்களும், "திராவிடநாடு" படத்தைத் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களும், மனோன்மணிய ஆசிரியர் சுந்தரனார் படத்தைத் தோழர் நெடுஞ்செழியன் அவர்களும், அர்ச்சுனன் அவர்களின் படத்தைத் தோழர் சி. டி. டி. அரசு அவர்களும் திறந்துவைக்கும் முறையில், பண்புகளையும் இயல்புகளையும் விளக்கி, மக்களின் உள்ளங்களில் பதியுமாறு பேசினார்கள்.

பிறகு பெரியாரவர்கள் "தற்கால அரசியல் நிலை" என்ற தலைப்பில் சுமார் 1½ மணிநேரம் பேசினார்கள்.

**பிற்பகல் நிகழ்ச்சிகள்.**

மாநாடு 1-30 மணிக்குக்கலைந்து மீண்டும் 3 மணிக்குக் கூடியது. மாநாட்டு நிகழ்ச்சி துவங்குவதற்கு முன்னால் சரோஜினி—சுந்தரராஜன் வாழ்க்கையொப்பந்தம் நடந்து பலர் மணமக்களுக்குப் பரிசு வழங்கப், பிறகு தீர்மானங்


## புதிய பதிப்பு

விற்பனைக்குத் தயார்!

★

1. பணம் பிடுங்கிப் பார்ப்பனர் ரூ. 0—14—0
2. பெண் ஏன் அடிமையானாள் 0—8—0
3. இயற்கை வழி ஆத்மீகவழி 0—4—0
4. அகத்தியர் ஆராய்ச்சி 0—3—0
5. திராவிடர்-ஆரியர் உண்மை 0—2—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்கும் இடம்

நாதன் கம்பெனி லிமிடெட்

கச்சேரி வீதி, ஈரோடு.


ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. (தீர்மானங்களை மற்றொருபுறத்தில் காண்க.)

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களுக்கும், தலைவர் சி. என். ஏ. அவர்களுக்கும் ஈரோடு நகர சபையார் அளித்த வரவேற்புக்காக இடையே தலைவர் சென்ற போது, குடந்தை தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

தீர்மானங்கள்நிறைவேறியபிறகு திருவள்ளுவர் படத்தைப் பெரியார் அவர்கள் திறந்து வைக்கும் முறையில் வள்ளுவரின் கருத்தை விளக்கினார்கள்.

தலைவர் சி. என். ஏ. அவர்களின் உற்சாகம் நிரம்பிய, வீரம் செறிந்த முடிவுரைக்குப் பிறகு தோழர் சம்பத் நன்றிகூற இரவு 8 மணிக்கு மாநாடு இனிது முடிந்தது.

உணவுக்குப் பிறகு இரவு $10\frac{1}{2}$ மணிக்கு முரசொலி ஆசிரியர் தோழர் மு. கருணாநிதி அவர்கள் தம்முடைய நண்பர்களோடு "தூக்கு மேடை" நாடகத்தை வசதிக் குறைகள் இருந்தும் சிறப்பாக நடத்தி $2\frac{1}{2}$ மணிக்கு முடித்தார்கள். தலைமை தாங்கிய தோழியர் குஞ்சிதம் அம்மையார் நாடகத்தின் சிறப்பைக் கூறி நடிகர்களைப் பாராட்டி மேலும் பல நாடகங்கள் எழுதி, இவ்வாறு நடத்தி மக்களுக்குப் புத்துணர்ச்சியூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள தோழர் டி. கே. சினிவாசன் அவர்களின் நன்றியுரையோடு சிறப்பாக முடிந்தது.

★

குரு தைலம்
மிகச் சிறந்தது
தலைவலி ஜீரம் ஜன்னி முதலிய சகலவித வாய்வு வலிகளுக்கும் நிகரற்றது
210-வியாதிகளுக்கு அரசன்
248
GURUCURES
22

டாக்டர் எ. மதுரம் சன்ஸ்
குரு மருந்து சாலை ... திருச்சிராப்பள்ளி

## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

★

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,

கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை